வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 03 | 02.05.2022 திங்கட்கிழமை | இதழ் : 147 | பக்கங்கள் : 16

## வடக்கு, கிழக்கு தமிழர் தாயகத்தை அங்கீகரி!

### த. தே. கூட்டமைப்பு மே தின பிரகடனம்

கிளிநொச்சி, மே 02

வட, கிழக்கு தமிழர் தாயகத்தை அங்கீகரித்து, தமிழர்களின் சுயநிர்ணய உரித்துக்களை ஏற்று, வேற்றுமையில் ஒற்றுமை கண்டு முன்னோக்கிச் செல்லும் திடசங்கற்பம் சிங்கள இனவாத ஆட்சி பீடத்தில் ஏற்படாதவரை, இலங்கைத்தீவில் இன, மத வேற்றுமை அற்ற வகையில் தொழிலாளர் உரிமைகளைப் பெற்று வாழ முடியாது - என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுத்துள்ள மே நாள் பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர் தினமான நேற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மே தின நிகழ்வுகள் வடக்

15

## கிளிநொச்சி மே தின பேரணி; சவப்பெட்டி எரித்து எதிர்ப்பு!

கிளிநொச்சி, மே 02

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கிளிநொச்சியில் முன்னெடுத்த மே தின நிகழ்விலும் 'கோட்டா கோ ஹோம்' என கோஷம் எழுப்பப்பட்டதுடன், சவப்பெட்டி எரித்தும் எதிர்ப்பு வெளியிடப்பட்டது.

தமிழ்த் தேசிய மே தின நிகழ்வுகள் கிளிநொச்சியில் நேற்று நடைபெற்றன. பிற்பகல் 2 மணியளவில் கிளிநொச்சி கரடிப்போக்கு சந்தியில் இருந்து ஆரம்பமான தமிழ்த் தேசிய மேநாள் நிகழ்வு பேரணி கிளிநொச்சி டிப்போ சந்தியை பிற்பகல் 3.30 மணியளவில் அடைந்தது.

இந்தப் பேரணியில் கலந்து கொண்ட மக்கள் கோட்டா கோ ஹோம் என்ற கோஷத்தையும் வடக்கு - கிழக்கு தமிழர் தாயகம் என்ற கோஷத்தையும் எழுப்பினர். அத்துடன், காணாமல்

15

## நெருக்கடிகளிலிருந்து இலங்கையை மீட்பதற்கு இந்தியாவும் போராடுகிறது

### தமிழக பாரதிய ஜனதா கட்சி தலைவர்

நுவரெலியா, மே 02

"இலங்கையை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்டெடுப்பதற்கு இந்தியாவும் போராடிக் கொண்டிருக்கின்றது. அன்று அனுமான் எப்படி சஞ்சீவி மலையை சுமந்தாரோ, அதுபோலவே இலங்கையின் பொருளாதார நெருக்கடியை சுமப்பதற்கு பாரத பிரதமர் நரேந்திர மோடியும் தயாராகவே இருக்கின்றார்." - இவ்வாறு இந்தியாவின் ஆளுங்கட்சியான பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழக தலைவரான அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் மே தின நிகழ்வில் பங்

15

# புகலிடம் கோரி தமிழகம் சென்றவர்கள் அகதி அந்தஸ்து பெறமுடியாத நிலைமை!

## திருப்பி அனுப்பப்படும் அபாயமும் உள்ளது

சென்னை, மே 01

பொருளாதார நெருக்கடியால் புகலிடம் கோரி தமிழகம் சென்ற இலங்கை தமிழர்களுக்கு இந்திய மத்திய அரசு அகதி அந்தஸ்தை இதுவரை வழங்கவில்லை. அவர்கள் அங்கு சென்று ஒரு மாதம் கடந்தும் அகதிக் கோரிக்கை ஏற்கப்படாததால் அவர்களை மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்பும் சூழல் எழுந்துள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.



15

## மகாசங்கத்தின் ஆலோசனையை ஆட்சியாளர்கள் மதிப்பதில்லை!

### ஓமல்பே தேரர் கடும் விசனம்!

கொழும்பு, மே 02

பிரதமர் பதவியில் எவ்வித மாற்றமும் ஏற்படுத்தப்படாத வகையில் ஸ்திரமான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதால் இடைக்கால அரசாங்கம் தொடர்பில் மகா சங்கத்தினருடனான பேச்சில் கலந்துக்கொள்வது அவசியமற்றது என வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் தன்னிடம் தெரிவித்தாரெனக் கூறிய ஓமல்பே சோபித தேரர், ஆளும் தரப்பினர் மகாநாயக்க தேரர்களின் ஆலோசனைக்கும் மதிப்பளிப்பதில்லை எனவும் விசனம் வெளியிட்டார்.

15



## கட்சிகளின் மே தின பேரணிகளில் குறைந்தளவு மக்களே பங்கேற்றனர்!

கொழும்பு, ஏப். 02

சர்வதேச தொழிலாளர் தினமான நேற்று நாட்டின் பிரதான கட்சிகள் மே தின பேரணிகள் கூட்டங்களை கொழும்பில் நடத்தின. ஆனால், இவற்றில் வழக்கமாகக் கூடும் மக்களின் எண்ணிக்கையை விடக் குறைந்தளவிலானோரே பங்கேற்றனர் என்று தெரிய வருகின்றது.

சர்வதேச தொழிலாளர் தினமான நேற்று, பிரதான அரசியல்

15

## நாளை ரமழான்!

கொழும்பு, மே 02

இலங்கை வாழ் இஸ்லாமியர்கள் நாளை செவ்வாய்க்கிழமை ரமழான் பெருநாளை கொண்டாடவுள்ளனர் என்று கொழும்பு பெரிய பள்ளிவாசல் அறிவித்துள்ளது.

இலங்கையில்,

15

## தடுப்பூசி அட்டை கட்டாயம் அறிவிப்பு மீளப்பெறப்பட்டது

கொழும்பு, மே 02

இலங்கையில் பொது இடங்களுக்கு பொது மக்கள் செல்வதற்கு முழுமையாக கோவிட் தடுப்பூசிகளை கட்டாயம் பெற்றிருக்க வேண்டும் என்ற வர்த்தமானி அறிவித்தல் மீளப்பெறப்பட்டது.

ஏப்ரல் 30 ஆம் திகதி - நேற்று முன்தினம் முதல் பொது இடங்களுக்கு மக்கள் செல்வதற்கு முழுமையாக கோவிட்

15

## சுதந்திரமாகச் செயல்படுவதற்கு அரசு அனுசரணை வழங்கவில்லை!

### காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தின் உறுப்புரிமையைத் துறந்தார் சிராஸ் நூர்தீன்

கொழும்பு, மே 01

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு, காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் ஊடாக எந்த நன்மை பயக்கும் விடயங்களையும் முன்னெடுக்க முடியாமல் போயுள்ளது. அத்துடன் சுதந்திரமாக செயல்பட முடியவில்லை என்று சுட்டிக்காட்டி காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தின் உறுப்பினர் சிரேஷ்ட சட்டத்தரணி சிராஸ் நூர்தீன் இராஜிநாமா செய்துள்

15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# இப்படியும் நடக்கிறது...!

ராஜபக்ஷக்களை வீட்டுக்குப் போகச் சொல்லி காலிமுகத்திடலில் போராட்டங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. அந்தப் போராட்டம் எப்போது முடியும் என்பது இப்போது ஓரளவு புரிய ஆரம்பித்திருக்கின்றது.

அடுத்த ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவதற்கு, அண்ணளவாக இரண்டு ஆண்டுகளும் ஆறு மாதங்களும் இருக்கின்றன. அதற்குப் பின்னர் அவர் வீட்டுக்குப்போவது உறுதி. இதற்கு முன்னர் இன்றைய பிரதமர் தலைமையிலான அரசாங்கத்திற்குப் பதிலாக இடைக்கால அரசு ஒன்றை அமைக்க பலரும் முயன்று வருகின்றனர்.

அது சாத்தியமாகாது என்று இன்றைய பிரதமர் மஹிந்த, திடமான நம்பிக்கையை தொடர்ந்து வெளியிட்டு வருகின்றார்.

மறுபுறத்தில், எப்படியாவது இடைக்கால அரசு ஒன்றை அமைத்து தற்போதைய நெருக்கடிகளுக்கு தீர்வு கண்டுவிட வேண்டும் என்று, அரசியல் கட்சிகள் மாத்திரமன்றி, சில சிவில் சமூக பிரதிநிதிகளும் தொடர்ந்து முயன்று கொண்டிருக்கின்றனர்.

இந்த விடயங்கள் எதிலும் அக்கறைப்படாமல், இந்த அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புவதிலேயே குறியாக இருக்கின்றன பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியும் ஜே. வி. பியும். அவர்களுக்கு தேவை உடனடியாக தேர்தல் மட்டுமே.

நாளை பாராளுமன்றம் கூடவிருக்கின்றது. அதன்போது எதிர்க்கட்சி கொண்டுவரவிருக்கும் அரசு மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு சமாந்திரமாக ஜனாதிபதிக்கு எதிராகவும் ஒரு நம்பிக்கையில்லாப் பிரேரணையை தான் தயாரித்திருக்கிறார் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஆபிரகாம் சுமந்திரன் அறிவித்திருக்கிறார். அது அவரின் தனிநபர் முயற்சி என்றே தெரிகின்றது.

இந்த முயற்சிக்கு, ஐக்கிய மக்கள் சக்தியும், ஐக்கிய தேசியக் கட்சியும், ஜே.வி.பியும், மற்றைய சிறுபான்மை கட்சிகளும் ஆதரவு வழங்கலாம். ஆனால், பொதுஜன முன்னணியிலிருந்து சுயாதீனமாக இயங்கும் குழுவினர் நிச்சயமாக ஆதரவு வழங்கப் போவதில்லை. இந்நிலையில் அந்த பலப்பரீட்சை எதற்காக என்பது சுமந்திரனுக்கு மாத்திரமே வெளிச்சமானது.

பிரதமர் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணையை மாத்திரம் கொண்டுவருவதன் மூலம் ஒரு ராஜபக்ஷவை பாதுகாக்க முயல்வதாக போராட்டக்காரர்கள் நினைத்துவிடக்கூடாது என்பதற்காகவே இருவருக்கு எதிராகவும் பிரேரணைகளைக் கொண்டு வருவதாக சுமந்திரன் தெரிவித்திருக்கிறார். ஆனால், அவரே, அப்படி நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவந்தாலும், அதன்மூலம் ஜனாதிபதியை வீட்டுக்கு அனுப்ப முடியாது என்றும், பாராளுமன்றமும் ஜனாதிபதிமீது நம்பிக்கையை இழந்து விட்டது என்பதை வெளிக்காட்ட மாத்திரமே உதவும் எனவும் கூறியிருக்கிறார்.

அவரின் வாதம், விவாதத்திற்கு சரியானதுதான். ஆனால், அந்த பிரேரணை தோல்வியடைந்தால், அதன்மூலம் ஜனாதிபதியை பலப்படுத்த உதவுமே தவிர வேறு எவ்வகையிலும் உதவப்போவதில்லை.

அரசு மீதான, அதாவது பிரதமர் தலைமையிலான அமைச்சரவைமீதான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு பொதுஜன பெரமுனவின் சுயாதீனக்குழு ஆதரவு வழங்கலாம். ஆனால், ஜனாதிபதிக்கு எதிரான பிரேரணைக்கு அவர்கள் ஆதரவு வழங்கப்போவதில்லை என்கின்றபோது அவ்வாறு கொண்டுவருவது, ஒரு வகையில் ஜனாதிபதியை பாதுகாக்கவே உதவும்.

அரசு மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை பாராளுமன்றத்தில் வருவதற்கு முன்னதாக இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்காக நூற்றுபதின்மூன்று பேரின் ஆதரவைப் பெறும் முயற்சி நேற்றும் நேற்று முன்தினமும் தீவிரமடைந்திருந்தது.

ஆங்காங்கே இருந்து எம். பிக்களின் ஆதரவைப் பெற முயற்சிகள் நடந்தன என்பதை மனோ கணேசன் போன்றவர்கள் பகிரங்கமாகவே வெளிப்படுத்தியிருந்தனர்.

பேரம்பேசல்கள் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கின்றன. அந்த பேரம்பேசல்களில் முக்கியமாக ஈடுபட்டிருப்பவர்கள் நம்பிக்கையோடு இருக்கின்றனர் என்று தெரிகின்றது. ஆனால், அந்த முயற்சி வெற்றிபெற்று ஒரு குழுவாக அந்த நூற்றுப் பதின்மூன்றுக்கு மேற்பட்டவர்கள் இணைந்தால், பிரதமர் மஹிந்த அரசு பதவியை இழக்கவேண்டி வரலாம். ஆனால், அவ்வாறு நடந்தாலும், அந்த நூற்றுப் பதின்மூன்று- அல்லது அதற்குக் கூடிய அந்த உறுப்பினர்கள் ஒற்றுமையாக தங்களுக்குள் ஒருவரை பிரதமர் பதவிக்குத் தெரிவுசெய்வார்களா என்பதே இன்று மில்லியன் டொலர் அல்ல- பில்லியன் டொலர் கேள்வி.

அரசாங்கத்தில் இருந்து வெளியேறி சுயாதீனதாக இயங்கும் பதினொரு கட்சிகளின் தலைவர்களும் அந்தப் பதவியிலேயே குறியாக இருக்கின்றனர்.

அந்த நிலையில், இந்த அரசாங்கத்தை - மஹிந்த தலைமையிலான இன்றைய அமைச்சரவையை பாராளுமன்றில் சாதாரண பெரும்பான்மை மூலம் வீட்டுக்கு அனுப்பினாலும், அடுத்து என்ன நடக்கும் என்பது ஊகிக்க முடியாத 'கிளைமாக்ஸ்'தான்!

**- ஊர்க்குருவி.**

# மே நாள் எழுச்சி பேரணிகளின் பதிவுகள்










தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னெடுத்த தமிழ்த்தேசிய மேநாள் நிகழ்வுகள் கிளிநொச்சியில் நடைபெற்றபோது...!





புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் பேரணி வவுனியாவில் இடம்பெற்றவேளை...!




மட்டக்களப்பில் சிறீ லங்கா சுதந்திரக் கட்சி கிளையின் ஏற்பாட்டில் நடைபெற்ற போராட்டம்...!





தொழிலாளர் உரிமைகளை வலியுறுத்தி பெண்கள் மத்தியஸ்தானத்தல் வவுனியாவில் மேநாளை ஒட்டி நடத்தப்பட்ட விழிப்புணர்வு ஊர்வலம்...!

ஈழநாடு
Eelanadu
02.05.2022 திங்கட்கிழமை
பிலவ வருடம், சித்திரை 19

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# வெளிநாட்டு மீட்பர்களின் சாத்தியம்?

இலங்கையின் பொருளாதார நெருக்கடிகளிலிருந்து மீண்டெழுவதே - இப்போதைக்கு முதன்மையான பிரச்னையாகும். அரசியலமைப்பில் மாற்றங்கள் ஏற்படுத்துவதைக் காட்டிலும், இதுவே இப்போது முதன்மையானது. இவ்வாறு தனது, மேதின உரையில் குறிப்பிட்டிருக்கின்றார் - ரணில் விக்கரமசிங்க.

நெருக்கடியிலிருந்து, மீண்டெழுவதற்கு, சீனா, இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுடனான உறவுகளை மீளக் கட்டியெழுப்ப வேண்டுமென்று, ரணில் தெரிவித்திருக்கின்றார். இலங்கையைப் பொறுத்தவரையில், வெளிநாடுகளின் ஆதரவின்றி, இந்த நெருக்கடியிலிருந்து மீண்டெழ முடியாதென்பது அனைவருமே அறிந்த விடயம்தான். ஆனால், அதனை செய்யக்கூடிய வல்லமையுடன் அரசாங்கம் இருக்கின்றதா என்பதுதான் இங்குள்ள கேள்வியாகும்.

கோட்டாபய ராஜபக்ஷ தரப்பில் சர்வதேச சமூகத்தை அணுகி வெற்றி பெறக்கூடிய ஆளுமைகள் மிகவும் குறைவு. தற்போது நீதியமைச்சராக இருக்கும் அலி சப்ரி, அரசியலிலும் சரி, இராஜதந்திர விடயங்களிலும் சரி, ஒரு குழந்தை போன்றவர். இவ்வாறானவர்களின் மூலம், சர்வதேச சமூகத்தை எதிர்கொள்ள முடியுமா?

ரணில், இவ்வாறான கருத்துக்களைக் கூறுவதற்கு பின்னால் இருக்கும் காரணங்களில் இதுவும் ஒன்றாகும். ஏனெனில், கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்தில் சர்வதேச அனுபவமுள்ள ஆளுமையான நபர்கள் இல்லையென்பதை ரணில் அறிவார். ஆனாலும், ரணில் கூறுவது போன்று, இந்தியா, சீனா மற்றும் அமெரிக்கா ஆகிய முரண்பட்ட சர்வதேச சக்திகளுடன் சமவேளையில் உறவுகளை கட்டியெழுப்புவது சாதாரணமான விடயமல்ல. இன்றைய சூழலில் ரணில் அதிகாரத்தில் இருந்தாலும்கூட, அது இலகுவான விடயமாக இருக்கப்போவதில்லை. ஏற்கனவே, அம்பாந்தோட்டை துறைமுகத்தை, சீனாவுக்கு, 99 வருட குத்தகைக்கு வழங்கும் விடயத்தில் ரணிலாலும் தப்பித்துக் கொள்ள முடியவில்லை.

விடயம் அனைத்து வெளித்தரப்புக்களும், அவரவர் நலன்களை நிறுத்துப் பார்த்துத்தான் இலங்கைக்கு உதவுவது தொடர்பில் சிந்திப்பார்கள். இந்த பின்புலத்தில் நோக்கினால், சர்வதேச நாணய நிதியத்திடம் அதிகம் நெருங்கிச் செல்லும்போது, சீனா அந்த இடத்தில், அதிநாட்டம் காண்பிக்காமல் விடுவதற்கான வாய்ப்புக்களே அதிகமாகும். ஏனெனில், சர்வதேச நாணய நிதியம் சுயாதீனமான கட்டமைப்பைக் கொண்டிருந்தாலும்கூட, நாணய நிதியம், தாராளவாத நாடுகள் என்னும் கருத்தியல் இலங்கை கொண்டிருக்கும் சர்வதேச ஸ்தாபனங்களில் ஒன்றாகும். நவதாராளவாத அரசாங்கங்களை பலப்படுத்துவதும் சர்வதேச நாணய நிதியத்தின் இலக்குகளில் ஒன்றாகும். பனிப்போர் காலத்தில் இருந்தது போன்று - இப்போதைய நிலைமைகள் இல்லாவிட்டாலும்கூட, தாராளவாத கருத்தியல் இலக்கொன்று நாணய நிதியத்திற்கு பின்னால் இருக்கின்றது.

அதேவேளை, சீனாவின் நகர்வுகள் தொடர்பில் இந்தியாவும் அமெரிக்காவும் வேறுபட்ட பார்வைகளை கொண்டிருக்கின்றன. இந்தியா சில பிரத்தியேக வெளிவிவகார அணுகுமுறைகளை கொண்டிருந்தாலும் கூட, சீனாவுக்கு எதிரான அமெரிக்காவின் உலகளாவிய நகர்வுகளில் இந்தியாவும் ஒரு பங்காளியாகவே செயல்பட்டு வருகின்றது. இந்த பின்புலத்தில்தான், அமெரிக்காவின், இந்தோ - பசுபிக் இலக்கில் இந்தியாவும் பிரதான பங்காளியாக செயல்பட்டு வருகின்றது.

கோட்டாபய ராஜபக்ஷ, ஜனாதிபதியாகப் பதவியேற்றபோது, இந்தியா, அமெரிக்கா, ஜப்பான் மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளிலிருந்து முதலீடுகளை எதிர்பார்ப்பதாக தெரிவித்திருந்தார். இந்த கூற்றுக்குப் பின்னால், இந்தோ - பசுபிக் இலக்கில் ஒன்றுபட்டிருக்கும் நாடுகள் என்னும் புரிதலே கோட்டாபயவிடம் இருந்தது. ஆனால், இப்போது நிலைமைகள் தலைகீழாகிவிட்டன. இன்றைய பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்காக, கோட்டாபய என்ன செய்வார் - அவரால் என்ன செய்ய முடியும்? இந்தக் கேள்விகளுக்கான பதிலுடன் இலங்கையின் நாட்கள் எண்ணப்படுகின்றன.

# ‘சிங்கள தீவினுக்கோர் பாலம் அமைப்போம்’: பாரதியின் கனவை நனவாக்கும் ஸ்டாலின் !

**அலசுவது இராஜதந்திரி**

இ“லங்கையில் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மக்களுக்கு உதவுவதற்கே ஆரம்பத்தில் எண்ணியிருந்தேன். ஆனால், பின்னர் முழு இலங்கைக்கும் மனிதாபிமான அடிப்படையில் உதவுவதே சிறந்தது என்று எண்ணி உணவுப் பண்டங்கள், மருந்து வகைகளை இலங்கைக்கு வழங்கி உதவ தீர்மானித்தேன்“ என்று இந்தியாவின் தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் தமிழக சட்ட சபையில் தெரிவித்திருந்தார். அத்துடன், இலங்கையர்களுக்கு தமிழக மாநில அரசின் உதவியை வழங்க இந்திய மத்திய அரசு அனுமதி வழங்க வேண்டுமெனவும் தமிழக முதலமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளார்.



தமிழக முதலமைச்சரின் இலங்கைக்கு உதவும் தீர்மானத்துக்கு கட்சி பேதமின்றி அனைத்துக் கட்சியினரும் தமிழக சட்ட சபையில் ஏகோபித்த முறையில் ஆதரவளித்திருப்பது மற்றுமொரு குறிப்பிடத்தக்க அம்சமாக இருக்கின்றது.

தமிழக மாநில அரசு 123 கோடி இந்திய ரூபாய் மதிப்பிலான உணவு, மற்றும் மருந்து வகைகளை இலங்கைக்கு அனுப்ப முன்வந்துள்ளது. தமிழக முதலமைச்சர் மு. க. ஸ்டாலினின் இந்தத் தாராள அதேசமயம் பரந்துபட்ட உதவியை நோக்கும்போது இலங்கையின் பொருளாதார பிரச்னையை தமிழகத்தவர்கள் இன, மத, மற்றும் புவியியல் எல்லைகளுக்கப்பால் நின்று மனிதாபிமான கண்கொண்டு பார்த்துள்ளதையே அறிய முடிகின்றது.

அதேசமயம் மகாகவி சுப்பிரமணிய பாரதியார் இலங்கைக்கு தமது பாடல் வரிகள் மூலம் “சிங்களத்தீவினுக்கு பாலம் அமைப்போம்“ என்று பாடியதையும் நிதர்சனமாக்குவதாகவும் மு. க. ஸ்டாலினின் இலங்கைக்கான உதவி பற்றிய அறிவிப்பு விளங்குகின்றது.

இதேவேளை, இலங்கை தமிழர்கள்மீது பரிவு காட்டும் விதத்தில் தமிழக எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி தமது சொந்தப்பணத்திலிருந்து இந்திய ரூபாய் ஐம்பது இலட்சத்தை உதவித்தொகையாக அறிவித்துள்ளார்.

தமிழ்நாடு மாநில அரசு இவ்வாறு 123 கோடி இந்திய ரூபாய் பணத்தை இலங்கைக்கு நிவாரணமாக வழங்க முன்வந்துள்ள நிலையில், இந்திய மத்திய அரசு இலங்கைக்கு ஏற்கனவே அமெரிக்க டொலர் ஒரு பில்லியன் தொகையை உடனடி நிவாரண உதவியாக வழங்கியுள்ளது. அத்துடன், அமெரிக்க டொலர் 500 மில்லியனையும் உதவியாக வழங்கியுள்ளது.

தமிழ்நாடு மாநில அரசைப் பொறுத்தவரை இலங்கையின் வடக்கு - கிழக்கு மக்களுக்கு இலங்கையில் எண்பதுகளின் நடுப்பகுதியில் ஆயுதப்போராட்டம் ஆரம்பித்த காலம் முதல் மனிதாபிமான அடிப்படையில் நிறையவே உதவிகளை புரிந்து வந்திருந்தது. இன்றும்கூட இந்தியாவில் 94 ஆயிரம் இலங்கை தமிழ் அகதிகள் வாழ்ந்து வருகின்றனர். இத்தொகையினரில் பலர் 107 அகதி முகாம்களில் இன்றும்கூட வாழ்ந்து வருகின்றனர்.

இன்றைய தமிழக மாநில அரசு இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு 3,510 வீடுகளை தமிழகத்தில் கட்டிகொடுக்கவும் முன்வந்துள்ளது. இதுவிர, இலங்கைத்தமிழ் அகதிகளின் பிள்ளைகளுக்கு இந்தியாவில் கல்வி கற்க உதவுவதற்கும் தமிழக அரசு முன்வந்துள்ளது.

இத்தகைய மனிதாபிமான நடவடிக்கைகளின் பின்னணியிலேயே இன்றைய தமிழக முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் முழு இலங்கையர்களுக்கும் உதவும் வகையில் 123 கோடி இந்திய ரூபாய்களை இலங்கைக்கு வழங்க முன்வந்துள்ளார்.


இதேவேளை இந்திய உதவிப் பொருட்களுடன் இந்திய கடற்படைக்கப்பலொன்று இரு தினங்களுக்கு முன்னர் கொழும்பு துறைமுகத்தையும் வந்தடைந்திருந்தது.

கடந்த மார்ச் மாதம் முதல் இலங்கையின் வட பகுதியிலிருந்து இதுவரை, சுமார் நூறு பேர் வரை தமிழகத்தின் கரையோர பகுதிகளை சென்றடைந்துள்ளனர். இவர்கள் அனைவருமே இலங்கையில் நிலவுகின்ற பொருளாதார நெருக்கடிகளை தாக்குப்பிடிக்க முடியாதவர்களாகவே தமிழகத்தை அடைந்துள்ளனர்.

இலங்கையின் வடக்கிலிருந்து தமிழகத்துக்கு பொருளாதார அகதிகளாக வந்துள்ளோர் மூலமாகவும் தமிழக அரசு இலங்கையில் நிலவுகின்ற பொருளாதார நெருக்கடி குறித்து நேரடியாகவே அறிந்து கொள்ளும் சந்தர்ப்பத்தையும் பெற்றுள்ளது.

அண்மைக்காலங்களில் தமிழக மீனவர்களுக்கும் இலங்கை மீனவர்களுக்கும் இடையே பாக்கு நீரிணையில் எல்லை தாண்டி மீன்பிடிப்பது குறித்த சர்ச்சைகூட எழுந்திருந்தது. ஆனால், அவற்றையெல்லாம் பொருட்படுத்தாது பெருந்தன்மையோடு இன்று பொருளாதார நெருக்கடியால் தவித்து நிற்கின்ற இலங்கை மக்களுக்கு தமிழக முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் உதவ முன்வந்திருப்பது மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் “தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினையே அழித்திடுவோம்“ என்ற பாடல் வரியையும் நினைவுபடுத்துவதாகவே இருக்கின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



மே - 01 திங்கட்கிழமை
சுபகிருது வருடம் - சித்திரை 19
நல்ல நேரம் : 06.00 - 07.30
ராகு காலம் : 07.30 - 09.00
திதி : துவிதியை




**மேடம்**
நினைத்திருந்த செயல்களில் இன்று வெற்றி உண்டாகும்.புதிய நட்பின் வழியே இன்று பலன்கள் அதிகரிக்கும்.நீண்ட நாட்களாக எதிர்பார்த்திருந்த நன்மை கிடைக்கும்.

**இடபம்**
இன்று குடும்பத்தில் திடீர் செலவுகள் உருவாகும். விருந்தினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி தோன்றும்.மனதில் இனம் புரியாத குழப்பங்கள் ஏற்பட்டு விலகும்.

**மிதுனம்**
இன்று நீங்கள் மேற்கொள்ளும் முயற்சிகளில் வெற்றி உண்டாகும்.புதிய தொழில் தொடங்குவது பற்றிய சிந்தனை மேலோங்கும்.வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு திட்டமிடுவீர்கள்.

**கடகம்**
வாழ்க்கைத் துணையின் உடல் நலனில் கவனம் செலுத்துவீர்கள். புதிய சொத்துகள் வாங்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள்.நீண்ட நாட்களாக எதிர்பார்த்திருந்த தகவல் இன்று வந்து சேரும்.

**சிம்மம்**
குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றி மகிழ்வீர்கள். மற்றவர்கள் வழியே இன்று லாபம் உண்டாகும்.துணிச்சலுடன் செயல்பட்டு நினைத்ததை நிறைவேற்றுவீர்கள்.

**கன்னி**
எதிர்கால நலன் கருதி சில செயல்களை மேற்கொள்வீர்கள். குடும்பத்திற்குள் சில சலசலப்புகள் தோன்றி மறையும். பிறருக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற முடியாமல் போகும்.

**துலாம்**
அந்நியர்கள் வழியே சில சங்கடங்கள் உண்டாகும். வாழ்க்கைத் துணையிடம் எதிர்பார்த்தவை நிறைவேறும். பிள்ளைகளின் நலனுக்காக மேற்கொள்ளும் முயற்சி வெற்றியாகும்.

**விருட்சிகம்**
உங்களுடைய முயற்சிகளில் இன்று வெற்றி உண்டாகும்.உங்கள் செயல்களால் குடும்பத்தில் இன்று மகிழ்ச்சி ஏற்படும்.உறவினர் வழியில் எதிர்பார்த்த நன்மையை அடைவீர்கள்.

**தனுசு**
சகோதர வகையில் நன்மை உண்டு நட்பு வட்டம் விரியும்.குடும்பத்தினருடன் இன்று கோயிலுக்கு செல்வீர்கள். மனதில் குழப்பம் உண்டாகும். செயலில் தடை,தாமதம் ஏற்படும்.

**மகரம்**
பிறரால் ஏற்படும் சங்கடங்களை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். உங்கள் எதிர்காலம் குறித்த சிந்தனை இன்று மேலோங்கும்.வாழ்க்கைத்துணை வழியே நன்மை அடைந்து மகிழ்வீர்கள்.

**கும்பம்**
உங்கள் கவனக்குறைவால் சில சங்கடங்களை சந்திக்க வேண்டி வரும்.நீங்கள் எதிர்பார்த்த மகிழ்ச்சியை உங்கள் குடும்பத்தில் காண்பீர்கள். துணிச்சலுடன் செயல்பட்டு நினைத்ததை அடைவீர்கள்.

**மீனம்**
குடும்பத்தில் நெருக்கம் அதிகரிக்கும். நிம்மதி கூடும் நாள். செலவு அதிகரிப்பதால் மனம் குழப்பமடையும்.நிதானம் தேவை.எதிர்பார்த்திருந்த வரவு வீடு தேடி வரும். மகிழ்ச்சியான நாள்.

# மோடியை போல் செயல்பட்டதாலேயே இலங்கையில் பொருளாதார நெருக்கடி

## தமிழக காங்கிரஸ் தலைவர்



சென்னை, மே 02

இலங்கை ஆட்சியாளர்கள் இந்திய பிரதமர் மோடியைப் போல செயல்பட்டதால்தான் அங்கு கடும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது என தமிழக காங்கிரஸ் தலைவர் கே. எஸ். அழகிரி தெரிவித்துள்ளார்.

உப்பு சத்தியாகிரகத்தை நினைவுகூரும் விதமாக காங்கிரஸ் கட்சியினர் முன்னெடுத்த பாதயாத்திரை நேற்று நிறைவு பெற்றது. இதில், முன்னாள் மத்திய அமைச்சர் கே.வி.தங்கபாலு தலைமையில் தமிழக காங்கிரஸ் கட்சித்தலைவர் கே.எஸ்.அழகிரி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இதன்பின்னர் செய்தியாளர்களிடம் கருத்துரைத்த அவர்,

2024 மக்களவைத் தேர்தலில் காங்கிரஸ் தலைமையிலான மதச்சார்பற்ற கூட்டணிதான் வெற்றி பெறும். கடந்த 7 ஆண்டுகளாக பிரதமர் மோடி தலைமையிலான பா. ஜ. க. ஆட்சியில் பொருளாதாரம் மிகவும்சீர்குலைந்துள்ளது. கோடிக்கணக்கான இளைஞர்கள் வேலைவாய்ப்பின்றி தவித்து வருகின்றனர்.

இலங்கையில் உள்ள ஆட்சியாளர்கள் இந்திய பிரதமர் மோடியை போல நடந்துகொண்டதால்தான் கடும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. அனைத்தையும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்வதால் உள்நாட்டில் உற்பத்தி குறைந்துவிட்டது. இலங்கையில் பொருளாதாரத்தை நிலை நிறுத்த வேண்டும் என்றால் சுயசார்பு நிலை வேண்டும். அதற்கு இந்தியா உதவி செய்யும் - என்றார். (ஐ)

# தமிழே எங்கள் அடையாளம் தமிழில் பெயர் வையுங்கள்!

## கவிஞர் வைரமுத்து

வேலூர், மே 02

தமிழ்தான் எங்கள் அடையாளம். மொழிதான் எங்கள் நிலம். மொழி எங்கு முடிகிறதோ, அங்கு தமிழ்நாடு முடிகிறது. நிலத்தைத் தீர்மானிப்பதுதான் மொழி என்று கூறியிருக்கிறார் கவிஞர் வைரமுத்து. அத்துடன், அனைவரும் தமிழில் பெயர் வைக்கவேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

தமிழியக்கம் சார்பில் புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசனின் 132வது பிறந்தநாள் விழா, வேலூரில் நடைபெற்றது.

இதில் விருந்தினராகப் பங்கேற்ற கவிஞர் வைரமுத்து உரையாற்றுகையில், "பாவேந்தர் என்றும் மறக்கப்படமாட்டார். மரிக்கவும் மாட்டார். விடுதலைக்குப் பிறகும் வாழ்கிறார் அவர். வடநாட்டு கலைஞர்கள் சிலப்பேர், 'ஹிந்திதான் இந்தியாவின் தேசிய மொழி' என்று சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். பண்பாடு குறையாமல் அவர்களுக்கு ஒரு பதில் சொல்ல விரும்புகிறேன். ஹிந்தி பேசுபவர்கள் மட்டும்தான் இந்தியா என்றால், ஹிந்தி மொழி தேசிய மொழியாக இருந்து விட்டு போகட்டும். ஆனால், இது ஒரு பன்முக கலாசாரம் உள்ள தேசம். இங்கு, ஹிந்தி பொதுமொழி என்ற கருத்தை பொது வெளியில் யாரும் முன் வைக்காதீர்கள்.



வடகிழக்கு மாநிலங்களில் நீங்கள் ஆளப் பார்க்கிறீர்கள். ஹிந்தியை திணிக்கப் பார்க்கிறீர்கள். இந்தியாவிலுள்ள மாநிலங்களில் தாய் மொழி பற்று கொழுந்துவிட்டு எரிகிறது. மொழியை 'உயிர்' என்று சொன்னவர் கவிஞர் பாரதிதாசன். தமிழ்தான் எங்கள் அடையாளம். மொழிதான் எங்கள் நிலம். மொழி எங்கு முடிகிறதோ, அங்கு தமிழ்நாடு முடிகிறது. நிலத்தைத் தீர்மானிப்பதுதான் மொழி.

ஒரு கவிஞன் தன்னுடைய கொள்கைகளை விட்டுக் கொடுக்க மாட்டான். பெயர்தான் நம் அடையாளம். பெயர் என்பது நம் கலாசாரம். பெயர் என்பது நம் மண். பெயர் என்பது வரலாற்றுத் தொடர்ச்சி. எனவே, அனைவரும் தமிழில் பெயர் சூட்டுங்கள்" என்றார். (ஐ)

# சமஸ்கிருதத்தில் உறுதிமொழி! தமிழக அரசாங்கம் நடவடிக்கை

மதுரை, மே 02

மதுரை அரசு மருத்துவக் கல்லூரியில், சமஸ்கிருதத்தில் உறுதிமொழி ஏற்கப்பட்ட விவகாரம் தொடர்பாக தமிழக அரசு புதிய உத்தரவு பிறப்பித்துள்ளது.

மதுரை மருத்துவக் கல்லூரியில் முதலாமாண்டு மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடந்தது. இதில், வழக்கமான உறுதிமொழிக்கு பதிலாக மாணவர்கள் சமஸ்கிருதத்தில் மகரிஷி சரம் சப்த் என்ற உறுதிமொழி ஏற்றமை பெரும் சர்ச்சையானது.

இதனைத் தொடர்ந்து, மேடையில் பேசிய அமைச்சர் பழனிவேல் தியாகராஜன், சமஸ்கிருதத்தில் உறுதிமொழி ஏற்கபட்டது அதிர்ச்சியளிக்கிறது என அதிருப்தி தெரிவித்தார். இதனையடுத்து, சமஸ்கிருத உறுதிமொழி ஏற்றது தொடர்பாக விளக்கமளிக்குமாறு கல்லூரி முதல்வர் ரத்னவேலை விளக்கமளிக்குமாறு மருத்துவ கல்லூரி இயக்குநரகம் உத்தரவிட்டது.

இதனைத்தொடர்ந்து தேசிய மருத்துவ ஆணையத்தின் இணையதள பக்கத்தில் ஆங்கிலத்தில், சமஸ்கிருத வாக்கியங்கள் இருந்த உறுதிமொழியை மாணவர் சங்க பொதுச்செயலாளர் ஒருவர் தவறுதலாக பதிவிறக்கம் செய்து விட்டதாகவும், மருத்துவ கல்வி இயக்குநரகம் உத்தரவிட்டால் சம்மந்தப்பட்ட மாணவர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என கல்லூரி முதல்வர் விளக்கம் அளித்தார்.



இந்நிலையில் மருத்துவக் கல்லூரியில் மாணவர்கள் சமஸ்கிருதத்தில் உறுதி மொழி ஏற்ற விவகாரத்தில் கல்லூரி முதல்வர் ரத்னவேலை காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றி மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் உத்தரவிட்டுள்ளார். (ஐ)

# ஜனாதிபதி, பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை!

## ஒரேநேரத்தில் கொண்டுவருவதற்கு திட்டம் சஜித், அநுரவும் ஆதரவு என்கிறார் சுமந்திரன்!



**கொழும்பு, மே 02**

**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராகவும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்திற்கு எதிராகவும் கொண்டுவரப்படவுள்ள இரண்டு நம்பிக்கையில்லாப் பிரேரணைகளையும் ஒரே தருணத்தில் முன்னகர்த்துவதற்கு எதிர்க்கட்சிகள் இணங்கியுள்ளன.**

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க் கட்சித்தலைவருமான சஜித் பிரேமதாஸ, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரம சிங்க, மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திஸநாயக்க ஆகியோருடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளரும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் நடத்திய பேச்சுகளை அடுத்து இந்த இணக்கம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதுகுறித்து சுமந்திரன் எம். பி மேலும் கூறுகையில்,

ஐக்கிய மக்கள் சக்தியானது பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்திற்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வரவுள்ளது. அதற்குரிய ஏற்பாடுகளை அக்கட்சி முன்னெடுத்துள்ளது. இவ்வாறான நிலையில், காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் மற்றும் எதிர்க்கட்சியின் பிரதிநிதிகளின் கோரிக்கைக்கு அமைவாக ஜனாதிபதிக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்று என்னால் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

இந்த இரண்டு பிரேரணைகளையும் ஒரே தருணத்தில் தனிநபர் பிரேரணைகளாக பாராளுமன்றத்தில் முன்னகர்த்துவதற்குரிய நடவடிக் கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அதன் முதற்படியாக, நான் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஐ. தே. க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க, மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க உள்ளிட்டவர்களுடன் தனித்தனியான பேச்சுக்களை முன்னெடுத்தேன்.

இந்தப் பேச்சுக்களின் அடிப்படையில் அவர்கள் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அரசாங்கத்துக்கு எதிரான இரண்டு நம்பிக்கையில்லாப் பிரேரணைகளையும் ஒருமித்து முன்னெடுப்பதற்கு இணங்கியுள்ளனர். குறிப்பாக, காலிமுகத்திடத்தில் எழுச்சி யாக போராடிவரும் போராட்டக்காரர்களும் நாடாளவிய ரீதியில் வீதிக்கு இறங்கியுள்ள பொது மக்களும் ஜனாதிபதி கோட்டாபய, பிரதமர் மஹிந்த உள்ளிட்ட அனைத்து ராஜபக்ஷ குடும்பத்தினரையும் அவர்களின் அரசாங்கத்தையும் வீட்டுக்குச் செல்லுமாறே வலியுறுத்துகின்றனர்.

ஆகவே, அந்த வலியுறுத்தல்களுக்கு மேலும் அழுத்தங்களை அளிக்கும் வகையிலேயே இரண்டு பிரேரணைகளையும் ஒரே தருணத்தில் முன்னகர்த்துவதற்கு எதிர்க்கட்சிகளிடையே இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. அதேநேரம், நம்பிக்கையில்லாப் பிரேரணைகளை தனித்தனியாக முன்னெடுக்க முயற்சிக்கப்படும்போது ஏதேவொரு ராஜபக்ஷவை காப்பாற்றுவதற்கு முயல்கின்றோம் என்ற தோற்றப்பாடும் விஷமத்தனமாக பரப்பப்படுகின்றது.

ஆகவே, மக்களை குழப்பும் இவ்விதமான பிரசாரங்களுக்கு குறித்த இரு பிரேரணைகள் இரண்டையும் ஒன்றாக முன்னெடுப்பதன் மூலம் முற்றுப் புள்ளி வைக்க முடியும் - என்றார். (ஐ)

# மீனவர்களின் படகை மோதியது கடற்படை!



வடமராட்சி, மே 02

வடமராட்சி கடற்பரப்பில் வைத்து இரு மீனவர்கள் தொழில் செய்து கொண்டிருந்த படகை கடற்படை படையினரின் படகு மோதி விபத்து ஏற்படுத்தப்பட்டுள்ளது.

நள்ளிரவு வேளை, இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கடற்றொழிலாளிகள் இருவர் தெய்வாதீனமாக உயிர் தப்பியதுடன், சங்கத் தலைவரின் படகு மற்றும் இயந்திரம் மீளப் பயன்படுத்த முடியாதவாறு சேதமடைந்துள்ளன.

பருத்தித்துறை, சுப்பர் மடம் கடற்றொழிலாளர் சங்கத்தின் தலைவர் தேவராசா தேவகுமார் என்பவருக்கு சொந்தமான படகே இவ்வாறு சேதமடைந்துள்ளது.

படகு சேதடைந்ததால் நடுக்கடலில் தத்தளித்த இருவரையும் சில நிமிடங்கள் கழித்து கடற்படையினர் படகுடன் இழுத்து வந்து கரை சேர்த்துள்ளனர்.

தமது படகு மீது கடற்படையின் அதிவேகப் படகு ஏறிச் சென்றது என்று கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(ஐ - 3 -2)

# 130 கிலோ கேரள கஞ்சா கிளிநொச்சியில் சிக்கியது

கிளிநொச்சி, மே 02

130 கிலோ கேரள கஞ்சா கிளிநொச்சி - பூநகரி - வேரவில் பகுதியில் கைப்பற்றப்பட்டுள்ளது. இதன் மதிப்பு சுமார் இரண்டரை கோடி ரூபாய் என்று மதிக்கப்பட்டுள்ளது.

இராணுவப் புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த புலனாய்வு தகவலையடுத்து அந்தப் பகுதி நேற்று சுற்றிவளைக்கப்பட்டது.

இதன்போது, இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட கஞ்சாவை வெளியிடங்களுக்கு அனுப்பும் நோக்கில் பொதியிடப்பட்ட நிலையில் பற்றைக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது.

சுற்றிவளைப்பில் மீட்கப்பட்ட கஞ்சா 130 கிலோ என்றும் - அதன் மதிப்பு இரண்டரை கோடி ரூபாய் என்றும் கூறப்படுகின்றது. இந்தக் கஞ்சா பொதிகள் ஜெயபுரம் பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டன.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் தொடர்ந்து வருகின்றனர். (ஐ)

# தமிழகம் செல்ல முயன்றோர் கைது; படகோட்டிகளுக்கு விளக்கமறியல்!

யாழ்ப்பாணம், மே 02

திருகோணமாலையை சேர்ந்த 11 பேரை தமிழகத்துக்கு அழைத்துச் செல்ல முயன்ற படகோட்டிகள் இருவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பலாலி, அன்ரனிபுரத்தை சேர்ந்த படகோட்டிகளே இவ்வாறு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் கடந்த வெள்ளிக்கிழமை இரவு திருகோணமலையை சேர்ந்த 3 ஆண்கள், 3 பெண்கள், 5 சிறுவர்களை பலாலி கடற்பரப்பு ஊடாக தமிழகம் நோக்கி படகில் பயணித்திருந்தனர்.

அந்த சமயம் கடலில் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் அவர்களை கைது செய்ததுடன், அவர்களின் படகையும் வெளியிணைப்பு இயந்திரம், எரிபொருள் என்பவற்றையும் கைப்பற்றினர்.

கைதான 13 பேரையும் சட்ட நடவடிக்கைக்காக பலாலி பொலிஸாரிடம் கடற்படை ஒப்படைத்தது. மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் அவர்களை மல்லாகம் நீதிவான் முன்னிலையில் முற்படுத்தினர். அத்துடன், சான்று பொருட்களையும் மன்றில் பாரப்படுத்தினர்.

வழக்கை விசாரித்த மல்லாகம் நீதிவான், படகோட்டிகள் இருவரையும் எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். அத்துடன், ஏனை 11 பேரையும் பிணையில் செல்ல அனுமதித்தார். அத்துடன், இந்த வழக்கை 12ஆம் திகதிக்கும் ஒத்திவைத்தார். (ஐ-3)

# மக்கள் வாழ்வை நசுக்காதீர்கள் மன்னாரில் நேற்று போராட்டம்!

மன்னார், மே 02

சர்வதேச தொழிலாளர் தினமான நேற்று ஞாயிற்றுக்கிழமை மன்னார் பள்ளிமுனை கிராம மக்கள் அடையாள கவனவீர்ப்பு போராட்டத்தை நடத்தினர்.

தொழிலாளர்களின் உரிமைகள் மதிக்கப்பட வேண்டும், நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு உடனடியாக தீர்வு காணப்பட வேண்டும், இலங்கையில் தீர்க்க முடியாமல் காணப்படும் இனப் பிரச்னைக்கு விரைவில் தீர்வு எட்டப்பட வேண்டும் எனப் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்தில் பள்ளிமுனை பங்குத்தந்தை, அருட்சகோதரிகள் மன்னார் சமூக - பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் தலைவர் ஜாட்சன் பிகிறாடோ, மன்னார் நகர சபை உப தலைவர் ஜான்ஸன் உட்பட நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

“ஆட்சியாளர்களே அப்பாவி பொது மக்களின் வாழ்க்கையை நசுக்காதீர்கள், குழந்தைகளுக்கான பால்மா எங்கே?, தொழிலாளர்களின் பட்டினி நிலைக்கு பதில் சொல், பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கு, விலை உயர்வு உனக்கு என்ன விளையாட்டு, கடற்றொழிலாளர்களுக்கு எரிபொருளை வழங்க ஆவனம் செய், திட்டமிட்ட சிங்கள குடியேற்றத்தை நிறுத்து, மன்னார் வளைகுடாவில் கடல் வளங்களை அழிக்காதே, வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட எங்கள் உறவுகள் எங்கே? என்று எழுதப்பட்ட பதாகைகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர். அத்துடன், அவற்றை கோஷங்களாகவும் எழுப்பினர். (ஐ)



# அனைத்துமே கைமீறிவிட்டன! ஜனாதிபதியிடமே இறுதிமுடிவு!

## விஜயதாஸ ராஜபக்ஷ எம். பி.

கொழும்பு, மே 02

**பொருளாதார, அரசியல் நெருக்கடிகளால் நாட்டில் ஏற்பட்டுள்ள அனைத்து எதிர்மறையான நிலைமைகளும் கைமீறிவிட்டன என்று சுட்டிக்காட்டிய கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத் தரணி விஜயதாஸ ராஜபக்ஷ, எனினும், பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதற்கான இறுதி விடயம் தற்போது ஜனாதிபதியிடமே இருக்கிறது என்று கூறியுள்ளார்.**

சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பில் கருத்து வெளியிடும்போத அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரத்தில் நெருக்கடியான நிலைமைகள் ஏற்பட்ட தருணத்தில் அதாவது கடந்த ஏப்ரல் மாதத்தில் அரசியல் ரீதியாக முக்கியமான முடிவுகளை எடுக்க வேண்டியிருந்தது. அதனை நான் உள்ளிட்டவர்கள் ஜனாதிபதியிடத்தில் தெளிவாக எடுத்துரைத்திருந்தோம்.

அந்த சமயத்தில் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் அந்த விடயத்தைப் பொருட்டாகக் கொள்ளவில்லை. அதன் பின்னர் நிலைமைகள் நாளுக்கு நாள் மோசமடைய ஆரம்பித்தன. பொருளாதார நிலைமைகள் இறுக்கமான கட்டத்தை அடைந்தது ஒருபுறமிருக்கையில் காலிமுகத்திடல் தொடர் போராட்டங்கள் உடப்பட பொதுமக்கள் வீதிக்கு இறங்கினார்கள்.

தற்போது அந்தப் போராட்டங்கள் முழு வீச்சை அடைந்துவிட்டன. இந்த நிலையில்கூட, 21 ஆவது திருத்தச்சட்டத்தை தற்காலிக ஏற்பாடாக கொண்டு வருவதற்கான வரைவு ஒன்றை தனிநபர் பிரேரணையாக நான் உள்ளிட்ட எமது அணியினர் சபாநாயகரிடத்தில் கையளித்துள்ளோம்.

ஆனால், அதுசம்பந்தமாக அரசாங்கம் கூடிய கரிசனை கொண்டதாக இல்லை. தற்போதுகூட ஜனாதிபதி சர்வ



கட்சிகளின் பங்கேற்புடனான இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்கு தயாராக உள்ளதாக தெரிவிக்கின்றார். ஆனால், எதிர்க்கட்சி இந்த செயல்திட் டத்தில் இணைவதற்கு தயா ரில்லை. ஆகவே, இந்த முயற்சி வெற்றி அளிக்குமா என்று திடமாக நம்பிக்கை கொள்ள முடியாது.

எதிர்க்கட்சி சவால்களை ஏற்றுக்கொள்ளக்கூடிய திராணியைக் கொண்டிருக்க வேண்டும். ஆனால், எதிர்க்கட்சி சவால்களுக்கு முகங்கொடுக்காது, தனது அரசியல் நிகழ்ச்சி நிரலின் கீழ் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. எதிரணியில் இருக்கும் ஏனைய கட்சிகளும் அவ்விமான மனோ நிலையையே கொண்டிருக்கின்றன. அந்த வகையில் பார்க்கின்றபோது நாட்டின் நெருக்கடிகளுக்கு சுமுகமான தீர்வுகளைக் காணும் காலங்கடந்துவிட்டது. அனைத்து நிலைமைகளும் கைமீறிவிட்டன.

இந்நிலையில் ஜனாதிபதி கோட்டாபயவிடத்தில் தீர்வுக்கான இறுதி தீர்மானம் உள்ளது. அவர் பாராளுமன்றத்திற்கு அதிகாரங்களை வழங்கப் போகின்றாரா? புதிய பிரதமர் தலைமையில் அரசாங்கத்தை அமைக்கப் போகின்றாரா? இல்லை போராட்டக்காரர்களின் கோரிக்கைகளுக்கு அமைவாக தான் பதவி விலகப்போகின்றாரா? என்பதை அவரே தீர்மானிக்க வேண்டும். அவ்வாறில்லாது கால தாமதப்படுத்தப்படுமாயின் நிலைமைகள் மேலும் உக்கிரமடையும். தற்போது மேலெழுந் துள்ள 225 பேரும் தேவை யில்லை என்ற மக்களின் மனோ நிலை மேலும் வலுப்பெற்று போராட்டங்கள் தீவிரமடை யும் - என்றார். (ஐ)

# உர இறக்குமதியாளர்களுக்கும் விலை சூத்திரம் அறிமுகமாகும்

## விவசாய அமைச்சர் அறிவிப்பு



கொழும்பு, மே 02

உரங்களை இறக்குமதி செய்யும் நிறுவனங்களுக்கு விலை சூத்திரம் அறிமுகப் படுத்தப் படவுள்ளதாக விவசாய அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்துள்ளார்.

உரங்களை இறக்குமதி செய்யும் தனியார் அதிக விலைக்கு விற்பனை செய்வ தனால் விவசாயிகள் பல பிரச்னைகளை எதிர்நோக்குகின்றனர். இதற்குத் தீர்வுகாணும் வகையில், உர இறக்குமதி விடயம் தொடர்பில் அரசாங்கம் தலையிட்டு பிரச் னைகளுக்கு உரிய தீர்வு வழங்க முன்வந்துள்ளதாகவும் அமைச் சர் மேலும் தெரிவித்தார்.

# குறைந்தவிலையில் எரிவாயு தாய்லாந்துடன் உடன்படிக்கை!

## லிட்ரோ நிறுவனம் அறிவிப்பு

கொழும்பு, மே 02

குறைந்த விலையில் எரிவாயுவை இறக்குமதி செய்வதற்காக தாய்லாந்தின் சியாம் நிறுவனத்துடன் எதிர்வரும் வாரத்தில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் என லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

தாய்லாந்து நிறுவனத்திடம் இருந்து எரிவாயுவை இறக்குமதி செய்வதற்காக அடுத்த வாரத்திற்குள் அமைச்சரவை அனுமதி கிடைக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த மாதம் முதல் எதிர்வரும் 2 வருடங்களுக்கு நாட்டுக்கு எரிவாயுவை இறக்குமதி செய்வதற்கு கேள்வி மனுவின் ஊடாக குறித்த தாய்லாந்து நிறு வனம் தெரிவு செய்யப்பட்டது. (ஐ)

# மருந்து விலைகள் அதிகரிப்பு; வர்த்தமானியை இரத்து செய்க!

## அரச மருந்தாளர்கள் சங்கம்

கொழும்பு, மே 02

60 வகையான மருந்து பொருட்களின் விலையை 40 சதவீதத்தால் அதிகரிக்கும் வகையில் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தல் இரத்து செய்யப்பட வேண்டும் என அரச மருந்தாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

அநுராதபுரத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்து அதன் தலைவர் அஜித் திலகரத்ன இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஔடத கட்டுப்பாட்டு அதிகார சபை மற்றும் மருந்தக நிறுவனங்களின் ஊடாக தற்போது மருந்து பொருட்களின் விலை அதிகரிக் கப்பட்டுள்ளமையினால் மக்கள் வெகுவாக பாதிப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

# சட்டவிரோத எரிவாயு விற்பனை இருவர் அதிரடி படையால் கைது!

கொழும்பு, மே 02

சட்டவிரோதமாக லிட்ரோ எரிவாயுவை சேமித்து வைத்து விற்பனை செய்த இருவர் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ராஜகிரிய - மிரிஹான பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே குறித்த இரு வரும் கைது செய்யப்பட்டுள் ளனர்.

அங்கு லிட்ரோ எரிவாயுவுடன் கூடிய 12 சிலிண்டர்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அத்துடன், குறித்த எரிவாயு சிமேலதிக விசாரணைக்காக நுகர்வோர் விவகார அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (ஐ)





# மனப்பிட்டி விபத்தில் மூன்று பேர் உயிரிழப்பு

பொலநறுவை, மே 02

மட்டக்களப்பு - பொல நறுவை வீதியில் மனம்பிட்டி பகுதியில் இடம்பெற்ற விபத்தில் மூவர் உயிரிழந்தனர். முச்சக்கரவண்டியும் பேருந்தும் மோதிய இந்த விபத்தில் ஓட்டோவில் பயணித்தவர்களே உயிரிழந்தனர்.

இந்த விபத்தில் அரலங்கவிலை பிரதேசத்தை சேர்ந்த 67, 62 வயதுடைய வயோதிப தம்பியரும் 72 வயதான அவர்களின் உறவினருமே உயிரிழந்தனர் என்று பொலநறுவை பொலிஸார் தெரிவித்தனர்.

பேருந்தை முந்திச் செல்ல முற்பட்டபோதே முச்சக்கர வண்டி விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டது.பேருந்தின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள் ளார். (ஐ)

# எரிபொருள் பவுஸர் சங்கம் பணிப் புறக்கணிப்பில்!

கொழும்பு, மே 02

தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாமையால் இலங்கை பெற்றோலிய தனியார் தாங்கி ஊர்தி சாரதிகள் சங்கம் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் பணிப்புறக்கணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

அந்த சங்கத்தின் இணைச் செயலாளர் டீ. பி. சாந்த சில்வா இதனைத் தெரிவித்துள்ளார்.

கொடுப்பனவுகளை அதிகரிக்குமாறு வலியுறுத்தி இந்த தொழில்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

எரிபொருள் கட்டணம் அதிகரிப்புக்கு ஏற்றவகையில் தாங்கி ஊர்திக்கான கட்டணத்திலும் திருத்தம் ஏற்படுத்தப்பட வேண்டும் என அந்த சங்கத்தினர் வலியுறுத்துகின்றனர்.

இவ்வாறான பின்னணியில் நேற்று தமது ருவிட்டர் பக்கத்தில் பதிவொன்றை இட்ட வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர, கடமைக்கு திரும்பாத எரிபொருள் விநியோகஸ்தர்களுக்கான அனுமதியை இரத்து செய்யுமாறு இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையத்திற்கு அறிவுறுத்தியதாகக் குறிப்பிட்டார்.

அத்துடன், எரிபொருளை கொண்டு செல்வதற்காக புதிய விநியோகஸ்தர்களுக்கான அனுமதியை வழங்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு பணிப்புத்துள்ளாரெனக் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

ஈழநாடு



# இடைக்கால அரசாங்கத்தின் மோசடிகளுக்காக மக்கள் எழுச்சியை காட்டி கொடுக்க மாட்டோம்!

## தந்தையின் நினைவேந்தலில் சஜித் உறுதி

கொழும்பு, மே 02

**மக்கள் போராட்டத்தை, இடைக்கால அரசாங்கத்தின் மோசடிகளுக்காக காட்டிக் கொடுக்க முடியாது. முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் நினைவேந்தல் நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

மோசடி, இலஞ்சம், ஊழல் நிர்வாகத்திலிருந்து விடுவிப்பதற்காகக் கொண்டுவரப்படும் மோசடியான தந்திரோபாயமே இடைக்கால அரசாங்கமாகும் என்றும் அவர் சாடினார்.

இது நாட்டைக் கட்டியெழுப்புவதற்குப் பதிலாக நாட்டை மேலும் சீர்குலைக்கும் எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறான மோசடியான அரசாங்கத்துடன் இணைவதைவிட பதவிகளை இராஜினாமா செய்வதே தனக்கு மகிழ்ச்சியானது என்றார்.

நாட்டு மக்களின் புனிதமான போராட்டத்தை மோசடியான முறையில் காட்டிக்கொடுக்க மாட்டோம் என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், மறைந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் உருவச்சிலைக்கு முன்னால் இருந்து இந்த உறுதியை வழங்குவதாகவும் தெரிவித்தார்.



மறைந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் 29ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று புதுக்கடையில் உள்ள ரணசிங்க பிரேமதாஸவின் உருவச்சிலைக்கு முன்பாக நடைபெற்றது. (ஐ)

## சங்கிலி திருட்டுக்கள் நால்வருக்கு மறியல்!

கிளிநொச்சி, மே 02

சங்கிலி திருட்டுக்களுடன் சம்பந்தப்பட்ட நால்வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கிளிநொச்சி - தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குள், கடந்த மாதம் இருவேறு தினங்களில் சங்கிலி திருட்டு சம்பவங்கள் இரண்டு பதிவாகின. இந்தச் சம்பவங்கள் தொடர்பில் புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைவாக பொலிஸார் கடந்த 29ஆம் திகதி இருவரை கைது செய்தனர். அவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணைக்கு அமைவாக சங்கிலிகளை விலைக்கு வாங்கிய இருவரை பொலிஸார் கைது செய்தனர்.

கைதான நால்வரையும் நேற்று முன்தினம் நீதிமன்றில் முற்படுத்தியபோது, அவர்களை எதிர்வரும் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க கிளிநொச்சி நீதிவான் உத்தரவிட்டார். (ஐ)

## சாரதி அனுமதி பத்திர விநியோகம் நிறுத்தம்!

கொழும்பு, மே 02

நாட்டில் ஏற்பட்டுள்ள டொலர் நெருக்கடி காரணமாக சாரதி அனுமதிப்பத்திர அட்டை விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் அலுவலகம் தெரிவித்துள்ளது.

சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்வதற்கான உரிய பரீட்சைகளில் சித்தியடைந்த சுமார் 3 இலட்சம் பேருக்கு இது வரை சாரதி அனுமதிப் பத்திர அட்டைகள் வழங்கப்படவில்லை என அலுவலகத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் ஜெனரல் அலுவலகம் மாதத்துக்கு சுமார் 60 ஆயிரம் சாரதி அனுமதி பத்திரங்களை வழங்குவதாகவும், டிசெம்பர் 2021 முதல் புதிய சாரதி அனுமதி பத்திரங்களை அச்சிட்டு வழங்க முடியவில்லை என்றும் செய்தித் தொடர்பாளர் கூறினார்.

10 இலட்சம் சாரதி அனுமதிப்பத்திரங்களை அச்சிடுவதற்குத் தேவையான பொருட்களை கொள்வனவு செய்வதற்கான கடனுதவி கடிதங்களை வழங்குவதற்கு தேவையான டொலர்கள் இல்லாததால் தாமதம் ஏற்பட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தின் பேச்சாளர் தெரிவித்தார். (ஐ)

## வடக்கு, கிழக்கு சிவில் சமூக அமைப்புகள் ஒன்றிணைவு!



யாழ்ப்பாணம், மே 02

வடக்கு, கிழக்கு சிவில் சமூக செயல்பாட்டாளர்கள் ஒன்றிணைந்து, ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்புக்கான குழுவை அங்குரார்ப்பணம் செய்தனர். அத்துடன், தற்போதைய இலங்கைத் தீவின் நெருக்கடியில் தமிழரின் வகிபாகம் தொடர்பாகவும் ஆராய்ந்தனர்.

இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் வடக்கு, கிழக்கு சார்ந்த சைவ ஆதீன முதல்வர்கள், கத்தோலிக்க குரு முதல்வர்கள், சமய, சமூக, தொழில்சங்க பிரதிநிதிகள் பல்கலைக்கழகம் சார் பேராசிரியர்கள், மாணவர் பிரதிநிதிகள், மருத்துவர்கள், பொறியியலாளர், வங்கியாளர்கள், ஊடகவியலாளர், கல்விப்புலம் சார்ந்தோர் என பல்துறை ஆளுமை சார் செயல்பாட்டாளர்கள் தமது கருத்துக்களை பரிமாறினர்.

தமிழ் தேசியம் சார்ந்து பொருளாதார நெருக்கடியை எவ்வாறு அணுகுவது, சிங்கள மக்களுக்கும் சர்வதேசத்துக்கும் இந்த தருணத்தில் தமிழ் மக்கள் ஓர் திரட்சியாக எவ்வாறு தமிழரின் அடிப்படை அரசியல் பிரச்னைகளை கொண்டு சேர்ப்பது, பொருளாதார பிரச்னைக்கு மூலவேர் காரணமான தமிழ் மக்கள் மீதான அடக்கு முறைகளுக்கு தீர்வை பெற்றுக்கொள்ள சிங்கள மக்களிடையே மன மாற்றத்தை தூண்டல், சுயசார்பு பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புதல் என பல கோணங்களில் கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

இறுதியில், வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தழுவிய மாவட்டங்களை பிரதிநிதித்துவப் படுத்தி ஒருங்கிணைப்புக் குழு தெரிவு செய்யப்பட்டது.

தொடர் கலந்துரையாடல்கள் வாயிலாக தென்னிலங்கை சிங்கள மக்களுக்கான செய்தியான "உங்களை புரிந்து கொள்கின்றோம் எங்களை புரிந்து கொள்ளுங்கள்", எனும் தமிழ் மக்களின் அபிலாசைகளை ஒருமித்த குரலாக கொண்டு சேர்க்கும் வேலைத் திட்டங்களை பல தளங்களில் தொடர்ச்சியான கருத்தாடல்களுடன் முன்கொண்டு செல்வதாகத் தீர்மானிக்கப்பட்டு கூட்டம் நிறைவு பெற்றது. (ஐ)

## செய்தியாளர்கள் மீது தாக்குதல்

### வவுனியாவில் மூன்று பேர் கைது

வவுனியா, மே 02

வவுனியாவில் செய்தியாளர்கள்மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பில் மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளர் உள்ளிட்ட மூவரே பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருபவையாவன,

நேற்று முன்தினம் மாலை வவுனியா வேப்பங்குளத்தில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரி பொருள் நிரப்புவதற்காக வவுனியாவை சேர்ந்த இரு ஊடகவியலாளர்கள் சென்றுள்ளனர்.

அதிக மக்கள் வரிசையில் நின்றதை அவதானித்த அவர்கள் வரிசையை கட்டுப்படுத்த அந்த செய்தியாளர்கள் சில யோசனைகளை தெரிவித்தனர். இதன்போது, எரிபொருள் நிலையத்தினருக்கும் ஊடகவியலாளர்களுக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டது.

இதைத் தொடர்ந்து தாம் ஊடகவியலாளர்கள் என்று அவர்கள் தம்மை வெளிப்படுத்தினர். இதன்போது தமது எரிபொருள் நிரப்பு நிலையம் குறித்து செய்தி பிரசுரித்தது நீதானே என்று கூறி அவர்களை எரிபொருள் நிரப்பு நிலையத்தினர் தாக்கினர் என்று கூறப்படுகின்றது. இதில் காயமடைந்த ஒரு ஊடகவியலாளர் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது. இதையடுத்து எரிபொருள் நிரப்பு நிலையத்தை சேர்ந்த மூவர் கைது செய்யப்பட்டனர். (ஐ)

## நம்பிக்கையில்லா பிரேரணை; 120 பேர் கையொப்பமிட்டனர்!

### ஐக்கிய மக்கள் சக்தி அறிவிப்பு

கொழும்பு, ஏப். 02

அரசாங்கத்துக்கு எதிராகக் கொண்டு வரப்படவுள்ள நம்பிக்கையில்லா பிரேரணையில் இதுவரை 120 பேர் கையொப்பமிட்டுள்ளனர் என்று ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது.

அதன் தேசிய அமைப்பாளர் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க, நம்பிக்கையில்லா பிரேரணை அடுத்த வாரமளவில் சபாநாயகரிடம் கையளிக்கப்படவுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை அரசாங்கத்தில் இருந்து விலகி தனித்து செயல்படும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவு வழங்கவுள்ளனர் என்றும் திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட்டார். (ஐ)

## அமைச்சுக்களுக்கான விடயங்கள் அறிவிப்பு

கொழும்பு, மே 02

புதிய அமைச்சுகள் மற்றும் இராஜாங்க அமைச்சுகளுக்கான விடயதானங்கள் ஒதுக்கப்பட்டு, அதி விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கையொப்பத்துடன் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த வர்த்தமானி அறிவித்தலில் 31 அமைச்சரவை அமைச்சுகள் மற்றும் 39 இராஜாங்க அமைச்சுகளுக்கான விடயதானங்கள் தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளன. (ஐ)

ஈழநாடு



# பிரசாந்த் கிஷோர் பார்வையில் சிறந்த காங்கிரஸ் தலைவர் யார்?

- சரோஜ் சிங்



தேர்தல் வியூக வகுப்பாளர் என்ற தமது பொது அடையாளத்தை அகற்றி விட்டு தலைவராகும் ஆர்வத்தை வெளிப்படுத்தி வரும் பிரசாந்த் கிஷோர், வலுவான காங்கிரஸ் தேச நலனுக்கு அவசியம் என்று கூறியிருந் தார். எனினும், காங்கிரஸின் தலைமைப் பொறுப்பில் யார் இருக்க வேண்டும் என்பதில், அவரது கருத்து பரவலாக வெளிப் படுத்தப்படும் கருத்துடன் மாறுபடுகிறது.

காங்கிரஸ் தலைவராக ராகுல் காந்தியோ அவரது சகோதரி பிரியங்கா காந்தியோ வர வேண்டும் என்பது பிரசாந்த் கிஷோரின் முதல் தேர்வு அல்ல. “சோனியா காந்தியே காங்கிரஸ் தலைவராக வேண்டும் என்பதே எனது முதலாவது தேர்வு” என்கிறார்.

சில தினங்களுக்கு முன்பு பிரசாந்த் கிஷோர் காங்கிரஸ் மேலிடத்துக்கு காண்பித்த காணொளி காட்சி விளக்கத்தின்போது பிரியங்கா காந்தியை காங்கிரஸ் தலைவராக்க வேண்டும் என்று அவர் பரிந்துரைத்ததாக ஊகங்கள் நிலவின. உத்தர பிரதேசத்தில் சமீபத்தில் நடந்த சட்டமன்ற தேர்தலின் போது பிரியங்கா காந்தி அம்மாநிலத்தின் தேர்தல் பொறுப்பை கவனித்தார். ஆனால் அந்த ஊகங்கள் அனைத்தையும் நிராகரித்தார் பிரசாந்த் கிஷோர்.

இது குறித்து பிரசாந்த் கிஷோர் கூறுகையில், காங்கிரஸில் செய்ய வேண்டிய மாற்றம் குறித்தே காங்கிரஸ் மேலிடத்திடம் ஆலோசனை நடத்தியதாகவும் தலைமை மாற்றம் குறித்து அப்போது விரிவாக விவாதிக்கப்பட்டது என்றும் தெரிவித்தார்.

“தனிப்பட்ட முறையில் பேசிய விஷயங்களைப் பற்றி நான் வெளிப்படையாகச் சொல்ல மாட்டேன். பொதுவில் உள்ள விஷயங்களைப் பற்றி மட்டுமே பேசுவேன். நிலையான தலைமை பற்றி என் மனதில் இருந்த விஷயங்களை நான் அவரிடம் (சோனியா காந்தி) பேசினேன். காங்கிரஸ் கமிட்டியில் இருந்த எல்லா தலைவர்களும் எனது செய்முறை விளக்கத்தை பார்க்கவில்லை. நீங்கள் குறிப்பிடும் நபர் (பிரியங்கா காந்தி) காங்கிரஸின் தலைவராக வேண்டும் என்றெல்லாம் நான் பேசியதாக வெளிவரும் தகவல் முற்றிலும் தவறானது. நான் வலியுறுத்திக் கூறிய ஒரு விஷயம், காங்கிரஸ் கட்சியின் தேசிய தலைவராக இருப்பவர், நாடாளுமன்றத்தில் காங்கிரஸ் தலைவராக இருக்கக் கூடாது என்பதுதான். இப்போது சோனியா அத்தகைய இரட்டைப் பொறுப்பையே வகிக்கிறார். நான் அந்த இரண்டு பொறுப்புக்கும் தனித்தனி நபர் இருக்க வேண்டும் என்கிறேன்,” என்றார் பிரசாந்த் கிஷோர்.

### வலுவான காங்கிரஸ் நாட்டுக்கு முக்கியம்

பிரசாந்த் கிஷோர் மற்றும் காங்கிரஸுக்கு இடையே நடந்தது கட்சி வளர்ப்புப் பேச்சுவார்த்தை இல்லை. ஆனால் காங்கிரஸ் வலுவாக இருப்பது நாட்டின் நலனுக்கு அவசியம் என்பது பிராந்த்தின் வாதம்.

“பாரதிய ஜனதா கட்சியை மிகத் தீவிரமாக ஆதரிப்பவர்கள் கூட, வலுவான காங்கிரஸே நாட்டின் நலனுக்கு உகந்தது என கூறுவார்கள்” என்கிறார் பிரசாந்த் கிஷோர்.

கடந்த 10 ஆண்டுகளாக காங்கிரஸ் கட்சியின் வரைபடம் தொடர்ந்து சரிவடைந்து காணப்படுகிறது. 2014 மற்றும் 2019 மக்களவை தேர்தல்களில் அக்கட்சியின் செயல்பாடு ஏமாற்றம் அளித்தது. மாநிலங்களவைத் தேர்தலில் கூட அக்கட்சியால் பெரிதாக சாதிக்க முடியவில்லை. சமீபத்தில் நடந்த தேர்தல்களில் பஞ்சாப் போன்ற முக்கியமான மாநிலமும் காங்கிரஸின் கையிலிருந்து நழுவியது.

காங்கிரஸுக்கும் பிரசாந்த் கிஷோருக்கும் இடையே பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருந்தபோது, வரும் தேர்தலில் தனது செயல்திறனை மேம்படுத்துவதற்காக கட்சி அவரை நோக்கி இருப்பதாக நம்பப்பட்டது.

ஆனால், பிரசாந்த் கிஷோர் தாமாகவே காங்கிரஸுக்கு விளக்கம் தரச் சென்றாரா அல்லது காங்கிரஸ் மேலிடத்தால் அவர் அழைக்கப்பட்டாரா போன்ற கேள்விகளுக்கு பிரசாந்த் கிஷோர் விரிவாக பதில் அளித்தார்.

“காங்கிரஸ் தலைமை என்னை நோக்கி வரும் அளவுக்கு எனது அந்தஸ்தும், தகுதி பெரிதாக இல்லை. நான் பேச சோனியா காந்தி வாய்ப்பளித்தார், அதற்காக அவருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஒப்புக்கொண்ட விஷயங்களை அவர்கள் பின்பற்றினால், அதனால் காங்கிரசுக்கே பலன் கிடைக்கும், ஜனநாயகம், நாட்டுக்குப் பலன் கிடைக்கும்.”

காங்கிரஸிடம் அளித்த விளக்கக்காட்சி குறித்து பிரசாந்த் கிஷோர் கூறுகையில், “எனக்கு ஒரே ஒரு நிபந்தனை இருந்தது. ஐந்து மாநில தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு என்ன நடந்தது என பாருங்கள். நான் சொன்ன ஒரே ஒரு நிபந்தனையை செயல்படுத்துங்கள் என்றேன். நான் வைத்திருக்கும் புளூ பிரிண்ட் விவாதிக்கப்பட வேண்டும் என்றேன். கட்சியில் நான் சேரும் முன்பு என்னால் விதிக்கப்பட்ட நிபந்தனைகளை செயல்படுத்துங்கள் என்றேன். அப்படி செய்வதால் காங்கிரஸுக்குத்தான் பலன் கிடைக்கும் என்று சொன்னேன்,” என்றார்.

### “மோடியை வீழ்த்தாமல் இந்தியாவை வெல்லுங்கள்”

காங்கிரஸுக்கு அளிக்கப்பட்ட அறிவுரை குறித்து அவரிடம் கேட்டோம்.

“மோடியை எப்படி வீழ்த்துவது என்பதல்ல இப்போதைய பிரச்னை. இந்தியாவை எப்படி வெல்வது? (இது மோடியை தோற்கடிப்பது பற்றி அல்ல, இந்தியாவை வெல்வது பற்றியது)” என்றார் பிரசாந்த் கிஷோர்.

காங்கிரஸ் உட்பட நாட்டின் பல அரசியல் கட்சிகளுடன் நெருக்கமாக பணியாற்றியவர் பிரசாந்த் கிஷோர். 2014ஆம் ஆண்டு மக்களவை தேர்தலின் போது, அவர் பாஜகவின் அப்போதைய பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடிக்காக வேலை செய்தார்.

மக்களவை தேர்தலில் நரேந்திர மோடி மற்றும் பாரதிய ஜனதா கட்சியின் மாபெரும் வெற்றிக்குப் பிறகு, பிரசாந்த் கிஷோரின் பங்களிப்பு பெரிதும் பாராட்டப்பட்டது. 2015இல், அவர் மோடியின் பாஜகவில் இருந்து பிரிந்து, பிகாரில் நிதிஷ் குமாரின் ஐக்கிய ஜனதா தளம் மற்றும் லாலு யாதவின் ராஷ்ட்ரிய ஜனதா தளம் ஆகியவற்றிற்கான மாநில தேர்தல் வியூகத்தை உருவாக்கத் தொடங்கினார்.

அந்த தேர்தலில் பாஜக படுதோல்வி அடைந்தது. கடந்த ஆண்டு மேற்கு வங்க தேர்தலில் மம்தா பானர்ஜியின் கட்சியான திரிணமூல் காங்கிரஸ் வெற்றி பெற்றதிலும் பிரசாந்த் கிஷோருக்கு பங்களிப்பு இருந்தது. இதேபோல, பஞ்சாப் மாநிலத்தில் ஆம் ஆத்மி கட்சியின் வெற்றிக்காக அவர் பணியாற்றினார். 2017ஆம் ஆண்டில் இரண்டு மாநிலங்களில் காங்கிரஸுக்கு ஆலோசனை வழங்கினார். பஞ்சாப்பில் காங்கிரஸ் வெற்றி பெற்றாலும், உத்தர பிரதேசத்தில் காங்கிரஸ் மற்றும் சமாஜ்வாதி கூட்டணியால் எந்த அற்புதத்தையும் களத்தில் நிகழ்த்த முடியவில்லை.



### நிதீஷை ஈர்த்த பிரசாந்த் கிஷோர்

2017ஆம் ஆண்டில் பஞ்சாபில் காங்கிரஸ் பெற்ற வெற்றியை தனது அனைத்து வெற்றிகளுக்கும் முத்தாய்ப்பான ஒன்றாக கருதினார் பிரசாந்த் கிஷோர்.

காரணம், அந்த ஆண்டு நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில் ஆம் ஆத்மி கட்சி வெல்ல முடியாமல் தடுத்ததை தமது தொழில் வாழ்க்கையின் சிறந்த தருணமாக அவர் கருதினார். பஞ்சாபில் கேப்டன் அமரிந்தர் சிங் தலைமையில் தேர்தலில் போட்டியிட்ட காங்கிரஸின் வியூக வாதியாக பிரசாந்த் கிஷோர் இருந்தார்.

அந்த தேர்தலில் காங்கிரஸ் பெரும் பான்மை பெற்று ஆட்சி அமைத்தது. பின்னர் பிரசாந்த் கிஷோர் டெல்லி சட்டப் பேரவை தேர்தலில் ஆம் ஆத்மி கட்சியின் வெற்றிக்காக அதனுடன் இணைந்து தேர்தல் வெற்றி வியூகங்களை வகுத்துக் கொடுத்தார்.

நரேந்திர மோடி, ராகுல் காந்தி, லாலு யாதவ், மமதா பானர்ஜி போன்ற தலைவர்களுடன் பணியாற்றிய பிரசாந்த் கிஷோர், அனைத்து தலைவர்களையும் விட நிதிஷ் குமாரால் அதிகம் அங்கீகரிக்கப்பட்டதாகக் கூறுகிறார்.

“முன்பு நிதிஷ் ஜியால் நான் ஈர்க்கப்பட்டேன். இன்று இருக்கும் நிதிஷ் குமார் சரியாக இல்லாமல் போகலாம். ஆனால் அவரது செயல்பாடு என்னை இப்போது ஈர்க்கவில்லை. ஆனால், அதற்கு முன்பாக ஒரு கட்டத்தில் நான் நிதிஷ் குமார் மீதான தாக்கத்தால் அவரது கட்சியிலேயே சேர்ந்தேன். அந்த வகையில் நான் சேர்ந்த ஒரே கட்சி ஐக்கிய ஜனதா தளம் மட்டுமே என்று வைத்துக் கொள்வோம்,” என்றார் பிரசாந்த் கிஷோர். நம்மிடையே பேசும்போது தனது எதிர்காலம் குறித்தும் பிரசாந்த் கிஷோர் விவாதித்தார்.

### ஒருவேளை பிரதமர் மோடி மீண்டும் அழைத்தால்...

2014ஆம் ஆண்டு நரேந்திர மோடியின் தேர்தல் பிரசாரத்தில் பிரசாந்த் கிஷோர் பங்கேற்றார், அது போல மீண்டும் பாஜகவில் “கர் வாப்சி” போல திரும்புவீர்களா? என்று கேட்டோம்.

“நான் ஒருபோதும் பாஜகவில் இல்லை. எனவே “கர் வாப்சி” என்ற வார்த்தை எங்கிருந்து வந்தது?” என நம்மிடமே கேள்வி எழுப்பினார் பிரசாந்த்.

மேலும் பாஜவில் இணைவதற்கான வாய்ப்பை நிராகரித்த அவர், “என் முன்னே அப்படி எந்த வாய்ப்பும் இல்லை” என்று பதிலளித்தார்.

இன்னும் பிரதமர் நரேந்திர மோடியுடன் தொடர்பில் இருக்கிறீர்களா அல்லது அமித்ஷாவிடம் பேசுகிறீர்களா என்ற கேள்விக்கு பிரசாந்த் கிஷோர் நேரடியாக பதில் அளிக்கவில்லை.

“பிரதமர் உங்களை அழைத்தால், நான் உங்களிடம் பேசமாட்டேன் என்று சொல்லும் நபர் நாட்டில் யாராவது இருப்பார்களா? பிரதமர் நாற்காலியை மதிக்காமல் இருக்க முடியாது. அவர் அழைத்தால் பேசத்தானே வேண்டும்” என்கிறார் பிரசாந்த் கிஷோர்.

2024ஆம் ஆண்டில், பாஜகவின் எதிர்காலம் மற்றும் மக்களவை தேர்தல் முடிவுகள் எப்படி இருக்கும் என்ற கேள்விக்கு அது பற்றிய எந்தவொரு வியூகத் தையும் செய்ய அவர் மறுத்துவிட்டார்.

மேலும் அவர், “இந்த நாட்டில் பாரதிய ஜனதா கட்சி ஒரு வலுவான அரசியல் சக்தியாக இருக்கும், அதை நாங்களும் நீங்களும் மறுக்க முடியாது, ஆனால் அந்த செல்வாக்கை மட்டும் வைத்துக் கொண்டு 2024 அல்லது 2029இல் பாஜக வெற்றி பெறும் என்று அர்த்தமல்ல” என்கிறார்.

பாஜகவை எந்த மூன்றாம் அணியாலும் எதிர்க்க முடியாது என்றும் பிரசாந்த் கிஷோர் கூறினார்.

“இந்த நாட்டில் எந்த ஒரு மூன்றாவது அல்லது நான்காவது அணியும் தேர்தலில் வெற்றிபெறும் என்று நான் ஒருபோதும் நம்பவில்லை. தேர்தலில் யார் வெற்றி பெற விரும் புகிறாரோ, அவர் இரண்டாவது முன்னணியாக மாற வேண்டும். பாஜகவும் தேசிய ஜனநாயக கூட்டணியும் நம்பர் ஒன் இடத்தில் இருப்பதைப் புரிந்து கொள்ளுங்கள். மூன்றாம் அணி முதலாவது அணியை தோற்கடிக்கும் என்று யார் சொன்னாலும் அதை நம்ப நான் ஒன்றும் முட்டாள் அல்ல. பாஜகவை தோற்கடிக்க வேண்டும் என்ற முனைப்பில் எந்த அணி இருந்தாலும், அது இரண்டாவது அணியாகத்தான் இருக்க வேண்டும்.”



“நாட்டிலேயே இரண்டாவது பெரிய கட்சியாக காங்கிரஸ் உள்ளது. ஆனால் பாஜகவுக்கு சவால் விடும் வகையில் இரண்டாவது முன்னணி அமையவில்லை,” என்கிறார் பிரசாந்த் கிஷோர் கூறினார்.

பிரசாந்த் கிஷோர் இரண்டு நாட்களுக்குப் பிறகு தமது அடுத்த நகர்வு பற்றிய தகவலை வெளியிடவிருக்கிறார். பிபிசி உடனான அவரது உரையாடலின்போது இதை அவர் நம்மிடையே வலியுறுத்தினார்.

“2024 மக்களவைத் தேர்தலின் போது, இந்தியா என்னை ஒரு வழக்கமான தேர்தல் வியூக வகுப்பாளராக இல்லாமல் ஒரு தலைவராகப் பார்க்கும்.”

# புதிய கல்வி சீர்திருத்தங்களின் பொருத்தப்பாடும் சாத்தியதன்மையும்!

■ ஜனதன்

**இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடி, டொலர் தட்டுப்பாடு, அரசியல் நிலைப்பாடு இவைகளால் மேற்படி கல்வித் திட்டத்தை மாற்றுவது 2023 இல் சாத்திய மாவது கேள்விக்குறியே. புதிய கல்விச் சீர்திருத்தங்கள் மூலமான பிரதிபலனை எடுப்பதற்கான காலம் நீண்ட ஒன்றாக மாறலாம்.**

உலகத்தையே மாற்றக் கூடிய ஒரு ஆயுதம் உள்ளது, அதன் பெயர் கல்வி என்றார் நெல்சன் மண்டேலா. கல்வியானது அறிவையும் ஆற்றலையும் நுண்ணிய சிந்தனைகளையும் கொடுக்கின்றது. கற்றவர்களினாலேயே மனிதத்துவம் பேணப்படுகின்றது. கல்வி, தனிமனிதனை பலம் மிக்கவனாக மாற்றுகிறது. பேசும் திறனும், செயல்சார் வல்லமைகளும் கல்வியினாலேயே கிடைக்கின்றது.

மனித சமுதாயத்தின் மேம்பட்ட விருத்திக்கு கல்வி தான் காரணம். உலக நாடுகளிடையே அபிவிருத்தி என்பது கல்வியினாலேயே கணக்கிடப்படுகிறது. ஆரம்ப காலங்களில் குறுகிய நோக்காக இருந்த கல்வி காலப்போக்கில் பாரிய நோக்கம் கொண்ட ஒன்றாக மாற்றம் பெற்றுள்ளது.

கல்வியின்றி வாழ்க்கை இல்லை என்பது யதார்த்தமான ஒன்றாகும். காலத்திற்கு காலம் கல்விக் கொள்கைகள் புதுப்பிக்கப்படுகின்றன. நாட்டின் பொருளாதார வளர்ச்சியை முன்னிலைப்படுத்தியே கல்விச் சீர்திருத்தங்கள் மாற்றம் செய்யப்படுகின்றது.

பின்லாந்து கல்வித் துறையில் முன்னிலை வகிக்கும் ஒரு நாடாகும். பின்லாந்து போன்ற நாடுகளை, அதன் கல்விசார் வளர்ச்சியை உதாரணமாக கொண்டே பல கல்விக் கொள்கைகள் வகுக்கப்படுகிறது.

ஒரு நாட்டிற்கு செலவில்லாமல் பாதுகாப்பு தருவது கல்வி என்றார் எட்மன் வர்க். காரணம் கத்தியினால் செய்த யுத்தங்களை விட புத்தியினால் செய்து வென்ற யுத்தங்கள் அதிகம்.

ஆகையால் கல்வி மக்கள் சமுதாயத்திற்கு, அதிமுக்கியமான ஒன்றாகும். இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் கல்வியின் படி முறைகள் பல விதங்களில் மாற்றம் செய்யப் பட்டன. முதல் முறையாக 1991 இல் 19 ம் இலக்க தேசிய கல்வி ஆணைக்குழு சட்டத்தின் ஊடாக பல்வேறு சட்டங்கள் உருவாக்கப்பட்டன.

அதன் பின்னர் கல்விச் சீர்திருத்த மாற்றங்கள் 1993, 1996, 1997, 2003 ஆகிய ஆண்டுகளில் முன்னெடுக்கப்பட்டன. அதன் பின்னர் கல்வித் துறையில் பல மாற்றங்கள் முன்னெடுக்கப்பட்ட போதும் பதின்மூன்று வருட உத்தரவாதம் மிக்க கல்வி என்பது நல்லாட்சி அரசாங்கம் மூலம் முன்வைக் கப்பட்டது.

அதன்படி அபிவிருத்தி அடைந்த நாடுகளை முன்மாதிரியாக கொண்டு தொழிற்கல்வி முறையினை அடிப்படையாகக் கொண்ட சிறந்த கல்வி முறை உருவாக்கப்பட்டது. இருப்பினும் பல்வேறு நடை முறைச் சிக்கல்கள் காரணமாக இந்த முறையானது உறுதியற்ற ஒன்றாக மாறிக்கொண்டிருந்தது என்பதை உணர முடிகின்றது.

### புதிய கல்விச் சீர்திருத்தம் உருவாக்கப்படுவதற்கான காரணிகள்

1. கற்ற கல்விக்கும் வேலைக்கும் தொடர்பில்லாதிருப்பது.
2. பட்டத்திற்கும் கல்வித்துறைக்குமிடையிலான தொடர்பு கேள்விக்குறியாகின்றமை.
3. நவீன உலகில் ஆங்கிலம் மற்றும் தொடர்பாடல் அறிவுள்ள சமுதாயத்தை உருவாக்குதல்.
4. போதிய தொழில் வாய்ப்பு பெற முடியாத நிலை.
5. விசேட பரீட்சைகளை அடிப் படையாகக் கொண்டே கல்வி உயர்வு இருப்பதால் ஏனையவர்கள் நிலை குறித்த கேள்வி.
6. கல்வியின் மூலமான சிறந்த பிரஜைகளை உருவாக்கும் நிலையில் ஏற்பட்ட தொய்வு.

மேற்படி காரணங்களினால் சிறந்த ஒரு கல்வி முறையை உருவாக்க வேண்டியது அவசியமாகும் என்பதற்கிணங்க 2023 இல் நடைமுறைப்படுத்தப் படவுள்ள புதிய கல்வித் திட்டத்திட்டத்தை ஆராய்வோமானால் அதன் சாதக பாதகங்கள் புலப்படும்.

அதாவது 2023ம் ஆண்டின் புதிய கல்விக் கொள்கை நடவடிக்கைகள் இவையாகும்.



1. பாடநூல் , ஆசிரியர் வழிகாட்டி என்பன நீக்கப்பட்டு இதழ் வடிவ முறை அறிமுகம்.
2. முன்பள்ளி , 1.6.10 ஆகிய தரங்களில் பூரண கலைத்திட்ட மாற்றம்.
3. பாடவேளைகளில். மாற்றம் , அதாவது ஒரு பாடம் 1 மணித்தியாலம், ஏனைய நேரத்தில் உடற்கல்வி செயற்பாடு.
4. தவணைப் பரீட்சை முறை நீக்கப்பட்டு semester முறை அறிமுகம். ( 1 செமஸ்ரர் 12- 14 வாரங்கள்)
5. கற்றல் பேறு நீக்கம்- விருப்பிற்கேற்ற தெரிவு.
6. நேரடி கற்றல் மற்றும் ஐஊவு கற்றல் மூலமான கலவை கற்பித்தல் முறை
7. மொடியூல் தீம் அடிப்படையில் உருவாக்கம்.
8. தரம் 9 இல் தேசிய பொதுப்பரீட்சை.
9. தரம் 12,13 இல் சிரேஷ்ட இடைநிலையும் 6-11 கனிஷ்ட இடைநிலையுமாக இடைநிலைப் பிரிவு மாற்றம்.
10. தேசிய கல்விக் குறிக்கோள் 6
11. பரீட்சை புள்ளியிடலில் எழுத்து பரீட்சைக்கு 60 வீதமும் செயன் முறை பரீட்சைக்கு 40 வீதமும்.
12. புதிய கல்வி சீர்திருத்தம் தொடர்பில் அதிபர்கள் மற்றும் பெற்றோரின் எண்ணப்போக்கை ஆராய்தல் - 2021 இல் இதற்கான செயலமர்வுகள் ஆசிய அபிவிருத்தி வங்கியின் 400 மில்லியன் அமெரிக்க டொலர் திதி உதவியுடன் முன்னெடுப்பு.
13. PTS பாடம் நீக்கம்.
14. மீத்திறன் கூடிய மாணவர்கள் உரிய மொடியூல்களை குறிப்பிட்ட காலத்திற்கு முன் பூர்த்தி செய்து வகுப்பேற்றம் பெறலாம்.
15. அனைத்து வகுப்புகளிலும் மடிக்கணினிக் கற்றல்.
16. தரம் 1,6,10 வகுப்புகள் மாற்றத்திற்குள்ளாகும்.



புதிய கல்விச் சீர்திருத்தம் தரப்போகும் அனுகூலங்கள் பற்றி நாம் நோக்குவோமானால், புத்தகச் சுமை குறைக்கப்படுவது அவர்களின் உள நெருக்கடியை குறைக்கும் விடயமாகும்.

மடிக்கணினி மூலமாக முன்னெடுக்கப்படும் கற்றல் செயற்பாட்டினூடாக தொழிநுட்பம் சார் அறிவு விருத்தியாகும் தன்மை ஏற்படும்.

1,6,10 ஆகிய வகுப்புகளில் மாற்றத்தை ஏற்படுத்துவதனூடாக எதிர்காலத்தில் சவால்களுடன் போட்டியிடக்கூடிய ஒரு கல்வி முறையாக இது அமையும்.

சர்வதேச நாடுகளின் தரத்திற்கேற்ப ஆங்கில அறிவு மற்றும் தொழிநுட்ப அறிவு விருத்தியாவதன் மூலம் உலகமயமாகும் கல்வித் துறைகளுக்கேற்ப மேற்படிப் பினை மேற்கொள்ள சந்தர்ப்பங்கள் உருவாகும்.

அறிவுத் திறன் கூடிய மாணவர்களின் ஆற்றல் மேலும் அதிகரிக்கும். அதாவது மீத்திறன் கூடிய மாணவர்கள் விரைவில் அடுத்த கட்டத்திற்கு நகர்வதற்கான வாய்ப்புகள் அதிகமாகும்,.

உடற்கல்வி நேரம் அதிகரிப்பதால் மாணர்களின் ஆரோக்கியம், அறிவுத் திறன், செயற்றிறன் , உடல் உள மேம் பாடு என்பன அதிகரிக்கும். தொற்றா நோய்களில் இருந்து பாதுகாப்பு கிடைக்கும்.

நடைமுறை வாழ்வுடன் ஒன்றிய கல்வித் திட்டம் என்பதால் தொழில் வாய்ப்புக்கள் அதிகரிக்கும், வேலையின்மை பிரச் சினை தீர்க்கப்படும்,

விருப்பிற்குரிய கற்றல் வழங்கப்படுவதன் மூலம் மாணவர்களுக்கு தொடர்ச்சியாக கல்வி கற்கும் வாய்ப்பு கிடைப்பதால் மாணவர் இடைவிலகல் குறைவடைந்து கல்வி கற்ற சமுதாய வீதமும் அதனோடிணைந்த கௌரவமான வாழ்க்கை தரமும் கிட்டும்.

முக்கியமாக கிராமப்புற மாணவர்களின் வாழ்க்கை முறையில் மாற்றம் ஏற்படும்.

வன்முறைகள் குறைவடைந்து சிறப்பான சமூகம் உருவாகும்.

இதன் பாதகத்தினை நோக்குவோமானால் தற்போதைய பொருளாதார நெருக்கடியில் புதிய கல்விச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ள பல சவால்களை எதிர்கொள்ள நேரிடும்.

அதாவது அதிகளவில் நிதி மூலதனம் தேவைப் படும். ஆசிரியர்களுக்கான உள ரீதியான பயிற்சிகள், தொழிநுட்ப அறிவுசார் பயிற்சிகள் என வழங்க வேண்டியதனால் பாரிய நிதித்தேவை ஏற்படும். ஆசிரியர்களின் வினைத்திறன் மிக்க செயற்பாடே மாணவர்களின் வளர்ச்சி வீதத்திற்கு முக்கி பங்காற்றுகின்றது.

விளையாட்டு திடல்கள் அமைப்பதற்கான இடவசதி குறித்து கவனமெடுக்க வேண்டும். குறைந்த எண்ணிக்கையான மாணவர்கள் கொண்ட பாடசாலைகளை புனரமைப்பது தொடர்பில் யோசிக்க வேண்டும்.


ஓரளவு வயது முதிர்ந்த ஆசிரியர்களின் மனப்பக்குவம் , அவர்கள் இந்த கல்வி முறை மாற்றத்தை எந்த அளவிற்கு உள்வாங்கி செயற்படுவார்கள் என்பதுடன் தொழிநுட்ப ரீதியான கற்றல் முறையை அவர்கள் பயிற்சி செய்வது தொடர்பாக அவர்களின் முடிவுகள்.


இவற்றை எல்லாம் விட இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடி, டொலர் தட்டுப்பாடு, அரசியல் நிலைப்பாடு இவைகளால் மேற்படி கல்வித் திட்டத்தை மாற்றுவது 2023 இல் சாத்தியமாவது கேள்விக்குறியே. புதிய கல்விச் சீர்திருத்தங்கள் மூலமான பிரதிபலனை எடுப்பதற்கான காலம் நீண்ட ஒன்றாக மாறலாம்.

அரசியல் ஸ்திரத்தன்மை மாற்றமடையாமல் வேறு ஏதும் தற்போது சாத்தியமில்லை எனும் நிலையில் இவ்வாறான மிகப் பாரிய கல்வி மாற்றத்திட்டம் நடைமுறைச் சாத்தியமற்ற ஒன்று என்பது நிதர்சனமாகும்.


# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி


மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

37.  சம பக்க வடிவமான அறுகோண வடிவம் காணப்படுகின்றது. இதனை அமைக்கப் பொருத்தமான கம்பித் துண்டுகள் எது?



1) 2) 3)

38.  காட்டப்பட்டுள்ள திசையில் இருந்து பார்க்கும்போது தோன்றும் விதம் யாது?





1) 2) 3)



39. 3 4 3 = 15 இங்கு ஆகிய குறியீட்டைக் காட்டும் சரியான கணித குறியீட்டினைக் காட்டும் விடை யாது?

1) x , + 2) + , x 3) x , -

40. 



1) 2) 3)

**01)** **பின்வரும் பந்தியை வாசியுங்கள்.**

காலிக்கோட்டையானது போர்த்துக்கேயரால் அமைக்கப்பட்ட மிகப் பழைமையான கோட்டையாகும். இது பார்ப்பதற்கு கம்பீரமாக இருந்தது. அதன் நுழைவாயில் வழியாக உள்ளே நுழைந்தோம். அங்கே புராதன ஆயுதங்கள், பல்வேறு கடைத்தொகுதிகள் என்பன காணப்பட்டன. அவற்றைப் பார்வையிட்டபடியே கோட்டையின் மேற்பகுதிக்கு வந்தோம். ஆகா! மதிலின் மேல் மோதும் கடலலையின் அழகே அழகுதான்! காலி நகரின் அழகு எம்மைப் பரவசப்படுத்தியது.

**பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.**

i) பார்ப்பதற்கு கம்பீரமாக இருந்தது எது? ..................

ii) “நவீன” என்பதன் எதிர்க்கருத்து யாது? ..................

iii) அ∴றிணை, படர்க்கை, பன்மை வினைச்சொல் ஒன்று எழுதுக.

..................

iv) “எழில்” என்ற சொல்லின் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக. ..................

v) எம்மைப் பரவசப்படுத்தியது எது? ..................

vi) இடப்பெயர் ஒன்று எழுதுக. ..................

(6 புள்ளிகள்)

**02)** அ∴றிணை நிகழ்கால பன்மை வினைச்சொல்லைத் தெரிவுசெய்து அதன் கீழே கோடிடுக.

i) பறந்தன ii) குடிக்கின்றது iii) விழுகின்றன

(1 புள்ளி)

**03)** **தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.**

சிறப்புடன் / செய்தனர் / பொறுப்புக்களை / அனைவரும் / தமது / மிகவும்

..................

(1 புள்ளி)

**04)** **பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் எதிரே உள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.**

i) அம்மாவுடன் தம்பி சென்றது. ( )

ii) மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வார்கள். ( )

iii) புறாக்கூட்டம் பறந்தன. ( )

iv) ஒவ்வொரு பறவையும் அழகானவை. ( ) (4 புள்ளிகள்)

**05)** **பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக.**

ஐயா நீங்கள் எங்கே போக வேண்டும் (1 புள்ளி)

## விடைகள்

**37. 1** **38. 2** **39. 1** **40. 2**

**01.** 1) காலிக்கோட்டை 2) புராதன
3) காணப்பட்டன 4) அழகு
5) காலி நகரின் அழகு 6) காலிக் கோட்டை, காலி, கோட்டை

**02.** விழுகின்றன

**03.** அனைவரும் தமது பொறுப்புக்களை மிகவும் சிறப்புடன் செய்தனர்.

**04.** 1) × 2) ✓ 3) × 4) ×

**05.** ஐயா, நீங்கள் எங்கே போக வேண்டும்?

## கல்வி tv CHANNEL-1

**02.05.2022 திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

## கல்வி tv CHANNEL - 2

**02.05.2022 திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# பெரியநீலாவணை பொலிஸில் இப்தார் நிகழ்வு கொண்டாட்டம்!



கல்முனை, மே 02

புதிதாக திறக்கப்பட்ட பெரியநீலாவணை பொலிஸ் நிலையம் நடத்திய இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்வு சனிக்கிழமை மாலை பொலிஸ் நிலைய திறந்த வெளியரங்கில் பொறுப்பதிகாரி ஆர். ஜீ. துசார திலங்க ஜெயலால் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது நிகழ்வின் பிரதம விருந்தினராகக் கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ. எச். டி. எம். எல். புத்திக, கல்முனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் பொலிஸ் பரிசோதகர்கள் பொலிஸ் உத்தியோகத்தர்கள் உட்பட கிராம சேவை உத்தியோகத்தர்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சிவில் பாதுகாப்பு குழு அங்கத்தவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் இஸ்லாமிய மார்க்க சொற்பொழிவை மௌலவி எம். ஜி. ஏ அஷ் ஷெய்க் ஹமால் இஸ்லாஹி மேற்கொண்டார்.

இதன் போது அதிகளவான மக்கள் கலந்து கொண்டனர். (ஐ- 1)

# விரிவுரையாளர்களை வெளியேறவிடாது பல்கலைக்கழகத்தை மூடி போராட்டம்!

மட்டக்களப்பு, மே 02

**சுவாமி விபுலானந்த அழகியல் கலை நிறுவகத்தில் இரு மாணவர்களை விரிவுரையாளர் ஒருவர் தாக்கியமையைக் கண்டித்து நிறுவகத்தை மூடி மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால், நிறுவகத்தின் பணிப்பாளர் உட்பட விரிவுரையாளர்கள் வெளியேற முடியாது சுமார் 6 மணி நேரம் வளாகத்துக்குள்ளேயே முடக்கப்பட்டனர்.**



கல்லடியில் அமைந்துள்ள கிழக்கு பல்கலைக்கழகத்தின் அழகியல் பீடமா இந்த நிறுவகத்தில் கல்வி கற்றுவரும் இரண்டாம் வருட மாணவர்கள் இருவர் முதலாமாண்டு மாணவரை பகிடிவதையில் ஈடுபடுத்திய குற்றச்சாட்டில் அவர்களுக்கு வகுப்பு தடை விதிக்கப்பட்டது.

இந்நிலையில், அவர்களை மன்னிக்குமாறு நேற்று முன்தினம் காலை போராட்டத்தில் மாணவர்கள் ஈடுபட்டனர். இந்நிலையில், பிற்பகல் 3 மணிக்கு இது தொடர்பில் முடிவு செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்ட போதிலும் மாலை 6.30 மணி வரை எந்த முடிவும் அறிவிக்கப்படவில்லை என்று கூறப்படுகின்றது.

இந்நிலையில், மாலை விரிவுரையாளர்கள் வெளியேறிய போது மாணவர்களை அவர்களை தடுத்து தங்கள் கோரிக்கைக்கு பதில் கோரினர். இதன்போது ஏற்பட்ட முரண்பாட்டில் விரிவுரையாளர் ஒருவர் இரு மாணவர்களை தாக்கினார் என்று கூறப்படுகின்றது. இதில் அவர்கள் காயமடை ந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து, வளாகத்தின் கதவுகளை மூடிய மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால், அங்கிருந்த பல்கலைக்கழக பணிப்பாளர் உட்பட விரிவுரையாளர்கள் 10இற்கும் மேற்பட்டவர்கள் வெளியேற முடியாத நிலை ஏற் பட்டது.

இதனால், ஏற்பட்ட பத ற்ற நிலைமையை தொடர் ந்து அந்த இடத்திற்கு பொலிஸார் அழைக்கப்பட்டனர்.

அவர்களை வளாகத்துக் குள் செல்ல போராடிய மாணவர்கள் அனுமதிக்கவில்லை.

எனினும் , பல்கலைக் கழக விரிவுரையாளர் குழு ஒன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களுடன் பேச்சு நடத்தினர். இதைத் தொடர்ந்து நள்ளிரவு 12 மணியளவில் போராட்டத்தை நிறைவுறுத்தி விரிவுரையாளர்கள் வெளியேறினர். (ஐ)

# திருகோணமலையில் நேற்று ஆர்ப்பாட்டம்!




திருகோணமலை, மே 02

சிறீலங்கா சுதந்திர கட்சியின் ஏற்பாட்டில் திருகோணமலை மத்திய பேருந்து நிலையம் முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

நாடளாவிய ரீதியில் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்கள் வலுவடைந்து வருகின்ற இந்த நிலையில் அரசியல் நிலைமைகளை உடனடியாக சரியான நிலைக்கு நிறுவுங்கள் என்பதை வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

அரசாங்கம் பதவி விலக வேண்டும் இடைக்கால அரசாங்கம் ஒன்றை நிறுவி நாடு இப்போது எதிர்நோக்கி வருகின்ற பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்டெடுக்க வேண்டும், இனவாதத்தை முன்னிறுத்தி ஆட்சி பீடம் ஏறிய ஆட்சியாளர்கள் ஒரு நல்லது செய்திருக்கிறார்கள் இவ்வளவு காலமும் நாட்டு மக்கள் மத்தியில் பிரிவினையை ஏற்படுத்தி இருந்த நிலையில் தற்போது அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களின் ஊடாக அனைவரும் ஒன்றுபட்டு இருக்கின்றனர் என தெரிவித்தனர்.

ஊழல் நிறைந்த அரசியலில் இருந்து அவர்கள் விடுபட்டு நல்லதொரு சுபீட்சமான நாட்டைக் கட்டியெழுப்ப அனைவரும் ஒன்று திரள வேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்து தெரிவித்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் சுதந்திரக் கட்சியின் திருகோணமலை மாவட்ட செயல்பாட்டாளர்கள் கட்சியின் ஆதரவாளர்கள் பொதுமக்கள் என பலர் பங்கேற்றனர். (ஐ)

# சாய்ந்தமருது மருத்துவமனையில் மார்பு சிகிச்சை நிலையம் திறப்பு!

சாய்ந்தமருது, மே 02

சாய்ந்தமருது பிரதேச மருத்துவமனையில் மார்பு சிகிச்சை நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சாய்ந்தமருது சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் அதிகரிக்கும் காச நோயாளர்கள் எண்ணிக்கையை கட்டுப்படுத்தவே கல்முனை பிராந்திய மார்பு சிகிச்சை நிலையம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஐ. எல். எம். றிபாஸ் வழிகாட்டலில் பிராந்திய மார்பு சிகிச்சை நிலைய பொறுப்பு மருத்துவ அதிகாரி ஏ எச் திலிப் மபாஸ் இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தார்.

புதிதாகத் திறக்கப்பட்ட நீண்டகால சுவாச



நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் மாதத்தின் 3ஆவது வாரத்தில் விஷேட சிகிச்சைக்கு உட்படுத்தப்படவுள்ளனர். (ஐ)

# சத்திர சிகிச்சை செய்வோருக்கு அல் அமானா மன்றம நிதியுதவி

சாய்ந்தமருது, மே 02

சாய்ந்தமருது அல்- அமானா நற்பணி மன்றத்தால் சிறுநீரக சத்திர சிகிச்சை, இருதய சத்திர சிகிச்சை செய்ய பணத்தேவை உடையவர்களுக்கான உதவித் தொகை வழங்கும் நிகழ்வும் அமைப்பின் வருடாந்த பொதுக் கூட்டமும், இப்தார் வைபவமும் சனிக்கிழமை நடைபெற்றது.

அல் -அமானா நற்பணி மன்றத் தலைவர் ஏ.எல். பரீட் தலைமையில் அந்த அமைப்பின் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சிறுநீரக சத்திர சிகிச்சை, இருதய சத்திர



சிகிச்சை செய்ய பணத்தேவை உடையவர்கள், பெருநாளை கொண்டாட வசதியற்றவர்கள், அங்கவீனர்கள், பெண் தலைமைக் குடும்பங்கள் எனப் பலருக்கு உதவிகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில், உலமாக்கள், சாய்ந்தமருது பிரதேச செயலக அதிகாரிகள், முன்னாள் மாந கர சபை உறுப்பினர்கள், ஆசிரியர்கள், கல்வி மான்கள், பிராந்திய சமூக சேவை அமைப்புக் களின் பிரமுகர்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ)

# மிரட்டினால் அணு ஆயுதம் பாயும்: வட கொரிய அதிபர் எச்சரிக்கை!

*சியோல், மே 02*

“வட கொரியாவை மிரட்டினால் அணு ஆயுதங்களால் பதிலடி கொடுப்போம்“ என வட கொரிய அதிபர் கிம் ஜங் உன் எச்சரித்துள்ளார்.

வட கொரியாவின் 90வது ஆண்டு ராணுவ தின விழா அண்மையில் கொண்டாடப்பட்டது. இந்த விழாவில் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகள் நீர் மூழ்கி கப்பலை தகர்க்கும் ஏவுகணைகள் உட்பட நவீன ஆயுதங்களின் ராணுவ அணிவகுப்பு நடந்தது.

இவ்விழாவில் “ராணுவ பலத்தை மேலும் அதிகரிக்க வேண்டும்“ என கிம் ஜங் உன் வலியுறுத்தினார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் கிம் ஜங் உன், ராணுவ அதிகாரிகளை அழைத்து அணிவகுப்பை



சிறப்பாக நடத்தியதற்கு பாராட்டு தெரிவித்தார். அப்போது அவர் பேசியதாவது: “அணு ஆயுதங்களை தொடர்ந்து தயாரித்து நம் ராணுவ பலத்தை அதிகரிக்க வேண்டும் என்பதே என் விருப்பம். நம் நாட்டு நலனுக்கு எதிராக மிரட்டல் விடுப்பது அல்லது ஆபத்தான முயற்சிகளை மேற்கொள்ளும் பட்சத்தில் அதை தடுக்க நாம் முன்கூட்டியே அணு ஆயுதங்களை பயன்படுத்தும் நிலை வரலாம்.“- இவ்வாறு அவர் பேசினார்.

சமீபத்தில் “வட கொரியாவின் தாக்குதலை முன்கூட்டியே தடுக்கும் வலிமை எங்களிடம் உள்ளது“ என தென்கொரிய ராணுவ அமைச்சர் தெரிவித்திருந்தார். இதற்கு கிம் ஜங் உன் பதிலடி தந்துள்ளார். அமெரிக்காவிதித்து உள்ள பொருளாதார தடைகளை நீக்க வட கொரியா வலியுறுத்தி வருகிறது. ஆனால் அணு ஆயுதத யாரிப்பை முழுமையாக கைவிட்டால் தான் தடையை நீக்க முடியும் என அமெரிக்கா தெரிவித்து விட்டது. இதனால் அமெரிக்காவை ஆதரிக்கும் தென் கொரியா, ஜப்பான் ஆகிய அண்டை நாடுகளை மிரட்ட வட கொரியா தொடர்ந்து நவீன ஏவுகணை சோதனைகளை நடத்தி வருகிறது. இந்தாண்டு கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை உட்பட 13 சோதனைகளை வட கொரியா நடத்தியுள்ளது.



# பறக்கும் விமானத்தில் திருமணம் செய்த ஜோடி!

*லாஸ் வேகாஸ், மே 02*

விமானப் பயணத்தில் தாமதம் ஏற்பட்டு, குறிப்பிட்ட நேரத்தில் செல்ல முடியாததால், நடு வானில் பறந்து கொண்டிருந்த விமானத்திலேயே திருமணம் செய்து கொண்ட அமெரிக்க ஜோடிக்கு சமூக வலைதளத்தில் வாழ்த்துகள் குவிகின்றன.

அமெரிக்காவின் ஒக்லஹோமா மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் ஜெரேமி சால்டா - பாம் பேட்டர்சன்.

இருவரும் லாஸ்வேகாஸ் நகரில் உள்ள தேவாலயத்தில் திருமணம் செய்து கொள்ள திட்டமிட்டு, அதற்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர். ஆனால், அவர்களது விமான பயணங்களில் தாமதம் ஏற்பட்டது.

குறிப்பிட்ட நாளில் லாஸ்வேகாஸ் செல்லும் அமெரிக்க ஏர்லைன்ஸ் விமானமும் ரத்து செய்யப்பட்டது.

கடைசியாக டல்லாஸ் நகரில் இருந்து லாஸ் வேகாஸ் செல்லும் சவுத்வெஸ்ட் விமானம் ஒன்றில் கடைசி மூன்று இருக்கைகளை பதிவு செய்தார். விமான நிலையத்திலேயே இருவரும் திருமணஉடையை அணிந்து கொண்டனர்.

இருவரும் விமானத்தில் ஏறியதும், விமானத்திலேயே திருமணம் செய்து கொள்ளப் போவதாக பாட்டர்சன் கூறினார். விமான பணிப் பெண் ஜூலி, மணமகளின் தோழியாக மாறினார். பறந்து கொண்டிருந்த விமானத்தில் நடுவானில் 37 ஆயிரம் அடி உயரத்தில் ஜோடிக்கு திருமணம் நடந்தது. சக பயணியர் வாழ்த்து தெரிவித்து பரிசுகள் வழங்கினர்.

சக பயணியான புகைப்பட கலைஞர் புகைப்படம் எடுத்தார். இந்தப் படங்களை சவுத்வெஸ்ட் விமான நிறுவனம் சமூக வலைதளத்தில் வெளியிட்டது. ஏராளமானோர் அந்த படங்களை பகிர்ந்து, வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

# 51.33 கோடியை தாண்டியது உலக கொரோனா பாதிப்பு!

*வாஷிங்டன், மே 02*

உலகம் முழுவதும் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டு வருபவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வரும் நிலையில் நேற்று மாலை வெளியான தகவலின் படி உலகம் முழுவதும் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 51.33 கோடியாக அதிகரித்துள்ளது.

உலகம் முழுவதும் 513,312,529 பேர் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என உலக சுகாதார மையம் அறிவித்துள்ளது. மேலும் உலகம் முழுவதும் கொரோனாவிற்கு 6,260,678 பேர் மரணமடைந்துள்ளனர் என்றும், உலகம் முழுவதும் கொரோனாவில் இருந்து 467,239,988 பேர் மீண்டனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# சட்டப்படி தண்டனை: சிங்கப்பூர் அரசு விளக்கம்!

*சிங்கப்பூர், மே 02*

பொதைப் பொருள் கடத்திய வழக்கில் தூக்கு தண்டனை நிறைவேற்றப்பட்ட இந்திய வம்சாவளி நபருக்கு சட்டப்படி தண்டனை வழங்கப்பட்டதாக சிங்கப்பூர் அரசு தெரிவித்துள்ளது.

சிங்கப்பூரில் மலேஷியாவைச் சேர்ந்த இந்திய வம்சாவளியான நாகேந்திரன் தர்மலிங்கம் 34ஹெராயின் போதைப் பொருள் கடத்தியதால் கைது செய்யப்பட்டார். 2010ல் அவருக்கு நீதிமன்றம் தூக்கு தண்டனை விதித்தது. இந்த தண்டனையை எதிர்த்து அவரது தாய் கடைசியாக தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவை சமீபத்தில் அங்குள்ள நீதிமன்றம் நிராகரித்தது. இதையடுத்து கடந்த 27ம் தேதி நாகேந்திரனுக்கு தூக்கு தண்டனை நிறைவேற்றப்பட்டது.

முன்னதாக இந்த வழக்கில் நாகேந்திரனுக்கு மன்னிப்பு அளிக்கக்கோரி மலேஷிய பிரதமர் இஸ்மாயில் சாப்ரி யாக்குப் மற்றும் அதன் வெளியுறவுத் துறை அமைச்சர் சைபுத்தின் அப்துல்லா ஆகியோர் சிங்கப்பூர் பிரதமர் மற்றும் வெளியுறவு அமைச்சருக்கு கடிதம் எழுதி இருந்தனர். எனினும் அவர்களின் கோரிக்கையை ஏற்க சிங்கப்பூர் அரசு மறுத்துவிட்டது.

தூக்கு தண்டனை நிறைவேற்றப்பட்டதற்கு முதல் நாள் சிங்கப்பூர் பிரதமர் லீ செய்ன் மற்றும் வெளியுறவு அமைச்சர் விவியன் பாலகிருஷ்ணன் ஆகியோர் அவர்களுக்கு பதில் கடிதம் அனுப்பினர். அதில் “போதை பொருள் கடத்தல்காரர் நாகேந்திரன் தர்மலிங்கத்திற்கு சட்டப்படி தண்டனை வழங்கப்பட்டுள்ளது“ என குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த தகவலை சிங்கப்பூர் வெளியுறவுத் துறை அமைச்சகம் வெளியிட்டது.



## உக்ரைனுக்கு திடீர் பயணம்:

# குழந்தைகள், தன்னார்வலர்களை சந்தித்த நடிகை அஞ்சலின ஜூலி!

*கிவ், மே 02*

உக்ரைனிய தலைநகரமான கிவ்வுக்கு ஹாலிவுட் நடிகையான அஞ்சலின ஜூலி பயணம் மேற்கொண்டுள்ளார்.

அங்கு பல்வேறு இடங்களுக்கும் சென்று போரால் இடம்பெயர்ந்துள்ள மக்களிடம் கலந்துரையாடினார்.

ரயில்வே நிலையத்தில் இடம் பெயர்ந்த மக்களுக்கு உதவி செய்துவரும் தன்னார்வலர்களுடனும் அவர் கலந்துரையாடினார். அப்போது, நாள் ஒன்றுக்கு 15 பேருக்கு மனநல மருத்துவர்கள் ஆலோசனை வழங்கி வருவதாக அஞ்சலின ஜூலியிடம் தன்னார்வலர்கள் தெரிவித்தனர்.

ரயில்வே நிலையத்தில் உள்ள பெரும்பான்மையானோர் 2 லிருந்து 10 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் என்றும் தன்னார்வலர்கள் கூறினர்.

இதற்கு பதிலளிக்கும் விமதாக பேசிய ஜூலி, “அவர்கள் அதிர்ச்சியில் இருக்க வேண்டும். குழந்தைகளை அதிர்ச்சி எவ்வாறு பாதிக்கிறது என்பதை நான் அறிவேன். அவர்கள் எவ்வளவு முக்கியம், நாம் அந்த குழந்தைகளுடம் இருப்பதும் கொடுக்கப்படும் அரவணைப்பும் எவ்வளவு முக்கியம், அவர்களின் குரல்கள் எவ்வளவு முக்கியம் என்பதையும் நான் அறிவேன்” என்றார்.

46 வயதான நடிகை அஞ்சலின ஜூலி, ஐக்கிய நாடுகள் அகதிகள் முகமையின் சிறப்பு தூதராக உள்ளார்.

உள்நாட்டு போர் நடைபெற்றுவரும் ஏமனுக்கு ஐக்கிய நாடுகள் அகதிகள் முகமையின் சிறப்பு தூதரான அஞ்சலின கடந்த மாதம் சென்றார்.

## முன்னாள் மனைவிக்கு பணம் கொடுக்கப்பட்டதா?

# பாகிஸ்தான் பிரதமர் மீது இம்ரான் கான் குற்றச்சாட்டு!

*இஸ்லாமாபாத், மே 02*

கடந்த 2018ஆம் ஆண்டு பொது தேர்தலின்போது, தனக்கு எதிராக புத்தகம் எழுத தனது முன்னாள் மனைவி ரெஹ்மான் கானுக்கு தற்போதைய பிரதமர் ஷெரீப் குடும்பம் பணம் கொடுத்ததாக பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் குற்றம்சாட்டியுள்ளார்.

தன்னை பற்றி தவறான தகவல்களை பரப்ப மாபியாக்கள் மீண்டும் முயற்சி செய்துவருகின்றனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

பாகிஸ்தான் பஞ்சாபில் உள்ள முல்தானில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய இம்ரான் தான், 2018ஆம் வெளியான புத்தகம் குறித்து மறைமுகமாக விமர்சித்தார்.

முதல் மனைவி ஜெமிமா கோல்ட்ஸ்மித் குறித்து பேசிய அவர், பிரிட்டனில் பிறந்து தொலைக்காட்சி நட்சத்திரமாக உள்ள அவர் வழக்குகளை சந்திக்க நேரிட்டது. யூதக் குடும்பத்தில் பிறந்து ஆதிக்கம் செலுத்துவதாக ஷெரீப் குடும்பம் அவர் மீது குற்றச்சாட்டு சுமத்தியது.

2018 தேர்தலில் எனக்கு எதிராக புத்தகம் எழுத பெண்ணுக்கு (ரெஹ்மான் கான்) பணம் கொடுத்தவர்கள் இவர்கள் (ஷெரீப் குடும்பம்). ஈத் பண்டிகைக்கு பிறகு மீண்டும் என்னை குறித்து தவறான தகவல்கள் பரப்பவுள்ளனர். அவர்களுக்காக என்னிடம் ஒரு செய்தி இருக்கிறது. நான் உயிருடன் இருக்கும் வரை அவர்களுக்கு எதிராக போராடுவேன் என்றார்.

ஈழநாடு



# இறுதி பந்தில் சாம்ஸ் சிக்ஸர் மும்பைக்கு முதல் வெற்றி!

மும்பை, மே 02

ராஜஸ்தான் அணிக்கு எதிரான ஆட்டத்தில் 5 விக்கெட் வித்தியாசத்தில் மும்பை அணி வெற்றி பெற்றுள்ளது.

நடப்பு ஐ. பி. எல். தொடரின் 44ஆவது லீக் போட்டியில் ராஜஸ்தான் றோயல்ஸ் மற்றும் மும்பை இந்தியன்ஸ் அணிகள் விளையாடின. இதில் நாணயச் சுழற்சியில் வென்ற மும்பை அணித் தலைவர் ரோஹித் சர்மா பந்துவீச்சைத் தெரிவு செய்தார்.

ராஜஸ்தான் அணிக்காக பட்லர் மற்றும் தேவ்தத் படிக்கல் தொடக்க வீரர்களாக களம் இறங்கினர். பவர்பிளே ஓவர் முடிவதற்குள் முதல் விக்கெட்டை இழந்தது ராஜஸ்தான். படிக்கல் 15 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து வந்த ராஜஸ்தான் அணித்தலைவர் சஞ்சு சாம்சன் 7 பந்துகளில் 16 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். களத்தில் இருந்த பட்லர் மற்றும் மிட்செல் ஓட்டம் சேர்க்க தடுமாறினர். மத்திய ஓவர்களில் ராஜஸ்தான் அணி மொத்தம் 62 ஓட்டங்களையே எடுத்தது.

கடைசி ஐந்து ஓவர்களில் 56 ஓட்டங்களை சேர்த்தது. 16ஆவது ஓவரில் தொடர்ச்சியாக 4 சிக்ஸர்களை விளாசியிருந்தார் பட்லர். அவர் 67 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

அஸ்வின், 9 பந்துகளில் 21 ஓட்டங்களை எடுத்தார். 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 158 ஓட்டங்களை எடுத்தது ராஜஸ்தான்.

மும்பை அணி சார்பில் மெரிடித், ஹிருத்திக் தலா 2 விக்கெட்களை வீழ்த்தினர். டேனியல் சாம்ஸ் மற்றும் கார்த்திகேயா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இதனையடுத்து, 159 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய மும்பை அணிக்கு ரோஹித் சர்மா, இஷான் கிஷன் இணை தொடக்கம் கொடுத்தது.

நிலைத்து நின்று ஆடுவார் என எதிர்பார்க்கப்பட்ட ரோஹித் சர்மாவை 3ஆவது ஓவரிலேயே வீழ்த்தினார் ரவிசந்திரன் அஸ்வின். 2 ஓட்டங்களில் அவர் நடையைக் கட்டினார்.

அடுத்து வந்த சூர்யகுமார் யாதவ், இஷான் கிஷனுடன் கைகோர்த்தார். ஆனால், 26 ஓட்டங்களுடன் 6ஆவது ஓவரில் இஷான் கிஷன் பெவிலியன் திரும்பினார். இதையடுத்து திலக் வர்மா, சூர்யகுமார் யாதவ் இணைந்து அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினர்.

15 ஓவர்கள் முடிவில் மும்பை அணி 3 விக்கெட் இழப்புக்கு 122 ஓட்டங்கள் சேர்த்திருந்தது. அடுத்த ஓவரிலேயே திலக் வர்மா 35 ஓட்டங்களுடன் வெளியேற, இறுதி ஓவரில் பொலார்டும் 9 ஓட்டங்களில் நடையைக் கட்டினார்.

இறுதி ஓவரில் டேனியல் சாம்ஸ் சிக்ஸர் அடித்து அணியை வெற்றி பெறச் செய்தார். இதன்மூலம் 5 விக்கெட் வித்தியாசத்தில் ராஜஸ்தான் அணியை வென்று தனது முதல் வெற்றியை மும்பை இந்தியன்ஸ் அணி பதிவு செய்துள்ளது.

ராஜஸ்தான் தரப்பில், போல்ட், பிரஷித் கிருஷ்ணா, அஸ்வின், சாஹல், குல்தீப் சென் ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர். (ஐ)






## சென்னை அணியின் தலைவராகிறார் டோனி!

சென்னை, மே 02

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் தலைவர் பொறுப்பை மீண்டும் டோனியிடமே வழங்க ரவீந்திர ஜடேஜா முடிவு செய்துள்ளார்.

ஐ. பி. எல். 2022 போட்டியில் சென்னை அணியின் புதிய தலைவராக ஜடேஜா நியமிக்கப்பட்டார். ஐ. பி. எல். தொடர் தொடங்கியது முதல் (2 தொடர்கள் தவிர) தொடர்களில் அணியை சிறப்பாக வழி நடத்தி வந்த டோனி நடப்பு தொடரில் அந்த பொறுப்பை சகலதுறை வீரர் ரவீந்திர ஜடேஜாவிடம் ஒப்படைத்தார்.

ஆனால், நடப்பு ஐ. பி. எல். தொடரில் சென்னை அணி ஜடேஜா தலைமையில் குறிப்பிடத்தக்க வெற்றிகளைப் பெறவில்லை. இதுவரை விளையாடிய 8 ஆட்டங்களிலும் 6இல் தோற்று புள்ளிகள் பட்டியலில் கடைசிக்கு முந்தைய இடத்தில் உள்ளது. இதனால் புதிய தலைவர் ஜடேஜா மீது விமர்சனங்கள் எழுந்துள்ளன.

இந்த நிலையில் சென்னை அணியின் தலைவர் பொறுப்பை மீண்டும் டோனியிடமே வழங்க ரவீந்திர ஜடேஜா முடிவு செய்துள்ளார். ஒரு வீரராக சிறப்பான பங்களிப்பை வழங்கும் பொருட்டு இந்த முடிவை எடுத்துள்ளதாக ஜடேஜா தெரிவித்துள்ளார்.

ஜடேஜாவின் இந்த முடிவை ஏற்று சென்னை அணியின் தலைவராக மீண்டும் தொடர டோனி சம்மதம் தெரிவித்துள்ளாரெனக் கூறப்படுகிறது. (ஐ)

# பெங்களூரை வீழ்த்தியது குஜராத் ரைட்டன்ஸ் அணி!

மும்பை, மே 02

றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணியை ஆறு விக்கெட்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியுள்ளது குஜராத் ரைட்டன்ஸ் நடப்பு தொடரில் அந்த அணிக்குக் கிடைத்த எட்டாவது வெற்றி இது.



நடப்பு ஐ. பி. எல். தொடரின் 43ஆவது லீக் போட்டியில் றோயல் சலஞ்சர் பெங்களூர் மற்றும் குஜராத் ரைட்டன்ஸ் அணிகள் விளையாடின. இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற பெங்களூர் அணியின் தலைவர் டூப்ளசிஸ் துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தார்.

அந்த 20 ஓவர்களில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 170 ஓட்டங்கள் எடுத்தது. தொடர்ந்து 171 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை விரட்டியது குஜராத்.

அந்த அணிக்காக சஹா மற்றும் ஷுப்மன் கில் தொடக்க வீரர்களாகக் களம் இறங்கினர். இருவரும் முதல் விக்கெட்டுக்கு 51 ஓட்டங்கள் சேர்த்து சிறப்பான தொடக்கத்தைக் கொடுத்தனர். முக்கியமாக பவர் பிளேயில் அந்த அணி விக்கெட்டை இழக்கவில்லை. அதன் பிறகு சீரான இடைவெளியில் நான்கு விக்கெட்களை இழந்தது குஜராத்.

குஜராத் அணியின் அந்த நெருக்கடி நிலையை தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்தி விக்கெட்களை வீழ்த்த தவறினர் பெங்களூரின் பந்துவீச்சாளர்கள். டேவிட் மில்லர் (39 ஓட்டங்கள்) மற்றும் ராகுல் தெவாட்டியா (43 ஓட்டங்கள்) 79 ஓட்டங்களுக்கு இணைப்பாட்டம் அமைத்தனர். 19.3 ஓவர்கள் முடிவில் 4 விக்கெட் இழப்புக்கு 174 ஓட்டங்களை எடுத்து வெற்றி பெற்றது குஜராத். இருவரும் இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நடப்பு தொடரில் 9 போட்டிகளில் விளையாடி 8 போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளது குஜராத். அந்த அணி கிட்டத்தட்ட அடுத்த சுற்றுக்கு முன்னேறும் வாய்ப்பு பிரகாசமாக உள்ளது.

முன்னதாக, பெங்களூர் அணிக்காக பொறுப்புடன் விளையாடினர் விராட் கோலி மற்றும் ரஜத் பட்டிதார். அவர்களின் அசத்தல் கூட்டணி காரணமாக குஜராத் அணிக்கு 171 ஓட்டங்கள் இலக்கு நிர்ணயித்தது பெங்களூர்.

பெங்களூர் அணிக்காக விராட் கோலி மற்றும் டூப்ளசிஸ் தொடக்க வீரர்களாகக் களமிறங்கினர். ஓட்டம் எதுவும் எடுக்காமல் இரண்டாவது ஓவரில் தனது விக்கெட்டை இழந்தார் டூப்ளசிஸ்.

தொடர்ந்து வந்த ரஜத் பட்டிதார் உடன் இணைப் பாட்டம் அமைத்தார் கோலி. இருவரும் 99 ஓட்டங்க ளுக்கு விக்கெட்டை இழக்காமல் நிதானமாக விளையா டினர். இருவரும் அடுத்தடுத்து அரைச்சதம் கடந்து அசத்தினர். இந்த அரைச்சதம் மூலம் கோலி தனது மோசமான ஆட்டத்திலிருந்து மீண்டு வந்துள்ளார். 32 பந்துகளில் 52 ஓட்டங்களை எடுத்து பட்டிதார் ஆட்ட மிழந்தார். 53 பந்துகளில் 58 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

பின்னர் வந்த மக்ஸ்வெல் அதிரடியாக ஆடினார். முதல் பந்து முதலே அதற்கான முனைப்பை காட்டியிருந்தார் மக்ஸ்வெல். 18 பந்துகளில் 33 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழ்ந்தார். தினேஷ் கார்த்திக் 2 ஓட்டங்களில் விக்கெட்டை இழந்தார். லோம்ரோர் 8 பந்துகளில் 16 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 170 ஓட்டங்களை எடுத்தது பெங்களூர்.

குஜராத் அணி சார்பில் பிரதீப் சங்வான் 2 விக்கெட்களை வீழ்த்தினார். ஷமி, ரஷீத் கான், பெர்குசன் மற்றும் அல்சாரி ஜோசப் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றியிருந்தனர்.

(ஐ)

# மரண அறிவித்தல்

**தோற்றம்**
**28 - 02 - 1968**



**மறைவு**
**29 - 04 - 2022**

## சுப்பிரமணியம் உதயகுமார்

*(உதயாஸ் மணிக்கூட்டு நிறுவனம்- வவுனியா உரிமையாளர்)*

வவுனியா மரக்காரம்பளையைப் பிறப்பிடமாகவும், யாழ். வேலணை கிழக்கு 3ம் வட்டாரத்தை வதிவிட மாகவும், வவுனியா தோணிக்கல் குட்செட்றோட்டை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் உதயகுமார் அவர்கள் 29-04-2022 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற சுப்பிரமணியம், சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை கனகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், யோகராணி அவர்களின் அன்புக் கணவரும், தனுஷன், சிந்துஜன், பிரகாஷ் ஆகியோரின் அன்புத் தந்தையும்,காலஞ்சென்ற கனகரெத்தினம் மற்றும் முத்தம்மா, ஈசக்கிமுத்து, ராஜன், பார்வதி, காலஞ்சென்ற உதயகுலசிங்கம் மற்றும் ஞானம்மா, தேவிகா, உதயபாலன், உதயச்சந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும்,காலஞ்சென்ற சிவராமவதி, சிவசுந்தரம், காலஞ்சென்ற யோகராசா, இந்திராணி, காலஞ்சென்ற சிவராசா மற்றும் சண்முகரெத்தினம், பாஸ்கரன் மற்றும் தங்கம், திருஞானம், கௌரி, சிவனேசன், புஸ்பராணி, சிவா, அருட்செல்வர், மஞ்சுளா, நிர்த்திகா ஆகியோரின் அன்பு மைத்துனரும்,சித்திரவடிவேல், ஜெயஈஸ்வரி, காலஞ்சென்ற புஸ்பராசா, தவமலர், மங்களராணி, சுகந்தி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும் ஆவார்.அன்னாரின் இறுதிக்கிரியை 01-05-2022 ஞாயிற்றுக்கிழமை அன்று மு.ப 11:00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் தோணிக்கல் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள் கின்றோம்.

தொடர்புகளுக்கு:
**தனுஷன் - மகன்** Mobile : +33758848534

தகவல்:
**குடும்பத்தினர்.**

ஈழநாடு
Eelanadu

# மசகு எண்ணெயை ரஷ்யாவிடம் வாங்குவதற்கு இலங்கை திட்டம்!

கொழும்பு, மே 02

ரஷ்யாவிடமிருந்து மசகு எண்ணெயைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் இலங்கை அவதானம் செலுத்தியுள்ளது.

வெளிநாட்டு கையிருப்பில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் குறைந்த விலையில் மசகு எண்ணெயை பெற்றுக் கொள்வதன் மூலம் செலவைக் குறைக்க முடியும் என நம்பப்படுகிறது.

இது குறித்து இலங்கை கனியவள கூட்டுதாபனம் முன்வைத்துள்ள யோசனை தொடர்பில் திறைசேரி அவதானம் செலுத்தியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும், அமெரிக்காவின் பொருளாதார தடைக்குள்ளாகி ரஷ்யாவுடன் வர்த்தக ரீதியான நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு இராஜதந்திர அனுமதிகள் அவசியமாக உள்ளன.

உக்ரைன் மோதல் காரணமாக சர்வதேச சந்தையில் மசகு எண்ணெய் ஒரு பீப்பாய் 107 அமெரிக்க டொலருக்கு விற்பனை செய்யப்படுகிறது. எனினும், ரஷ்யாவிடமிருந்து ஒரு பீப்பாய் மசகு எண்ணெயை 35 அமெரிக்க டொலருக்கு பெற்றுக் கொள்ள முடியும் - எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)



## அரசாங்கத்துக்கு எதிராக வட்டவளையில் பேரணி!

வட்டவளை, மே 02

வட்டவளை -மவுண்ட்ஜீன் தோட்ட இளைஞர், யுவதிகளால் அரசாங்கம், ஜனாதிபதிக்கு எதிராக எதிர்ப்பு தெரிவித்து நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

மவுண்ட்ஜீன் தோட்டத்திலிருந்து ஆரம்பித்த ஆர்ப்பாட்டமானது, ஹற்றன் - கொழும்பு பிரதான வீதியுடாக வட்டவளை நகரத்தை நோக்கிச் சென்றது.

இதன்போது "இந்த அரசாங்கம் எமக்கு வேண்டாம், உகண்டாவில் உள்ள கறுப்பு பணம் எங்கே, தோட்ட தொழிலாளர்களை சுரண்டி பிழைத்தது போதும் அடிப்படைசம்பளத்தை அதிகரி" போன்ற கோசங்களையை எழுப்பிய வண்ணம் பதாகைகளை ஏந்தியவாறு வட்டவளை நகர் வரை சென்றனர். பின்னர் வட்டவளை பஸ் தரிப்பிடத்துக்கு முன் நின்று தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.

(ஐ)

## நம்பிக்கையில்லா பிரேரணைக்கு சுதந்திரக் கட்சி ஆதரவளிக்கும்!

"சர்வக்கட்சி இடைக்கால அரசில் பிரதான எதிர்க்கட்சியும் இணைய வேண்டும் என்பதேயே சிறீ லங்கா சுதந்திரக் கட்சியும் விரும்புகின்றது." - என்று அக்கட்சியின் சிரேஷ்ட உப தலைவரான மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

"நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையை சீர்செய்வதற்காக மகாநாயக்க தேரர்கள் முன்வைத்துள்ள கோரிக்கைகளுடன் நாம் உடன்படுகின்றோம். பிரதமரும் தற்போதைய அமைச்சரவையும் பதவி விலக வேண்டும். புதிய பிரதமரின்கீழ்தான் இடைக்கால அரசாங்கம் அமைய வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் ஐக்கிய மக்கள் சக்தியால் முன்வைக்கப்படும் நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவு வழங்கப்படும்." - என்றார்.







# 80 இலட்சம் தொழிலாளர்களின் வாழ்வு கேள்விக்குறியாகியுள்ளது

## சம்பிக்க ரணவக்க எம். பி. தெரிவிப்பு

கொழும்பு, மே 02

இன்று எமது நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையில், 80 இலட்சம் தொழிலாளர்களின் வாழ்க்கை கேள்விக்குறியாகி உள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்துரைக்கும்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார். இதன் போது தொடர்ந்துரைத்த அவர்,

நாட்டில் புள்ளிவிவர ரீதியாக 80 இலட்சம் தொழிலாளர்கள் வாழ்கின்றனர். இவர்களில் 14 இலட்சம் பேர் அரச ஊழியர்கள். 26 இலட்சம் பேர் தனியார் துறைகளில் பணியாற்றி வருகின்றனர். ஏனையவர்கள் விவசாயம், கைத்தொழில், கடற்றொழில் என ஏனைய துறைகளைச் சார்ந்தவர்களாக உள்ளனர்.

இந்த உழைக்கும் வர்க்கத்தினர் அண்மைக்காலமாக பாரிய அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர். ஆரம்பத்தில் கொரோனா பெருந்தொற்றுடன் ஏற்பட்ட பாதிப்பால் தொழில்சாலைகள் மூடப்பட்டன. அதேபோன்று விவசாயத் துறையும் பாதிக்கப்பட்டது.

அரச துறைகள் செயலிழந்தன. அரச அலுவலகங்கள் மூடப்பட்டன. தனியார் அலுவலகங்கள் மூடப்பட்டன. பலர் தொழில் வாய்ப்புகளை இழந்தனர். விசேடமாக சுற்றுலாத் துறை போன்ற துறைகளில் பலர் தொழில் வாய்ப்புகளை இழந்தனர்.

அதன் பின்பு உரப் பிரச்னை காரணமாக விசேடமாக விவசாயத்தை நம்பி வாழ்ந்த பலர் தொழில்வாய்ப்பை இழந்ததுடன் வாழ்வாதரத்தையும் இழந்தனர். கடந்த ஏப்ரல் மாதம் 12ஆம் திகதியிலிருந்து உத்தியோகபூர்வமாக எமது நாடு வங்குரோத்து நிலைமையை அடைந்துள்ளது.

வங்குரோத்து நிலைமையுடன் வெளிநாட்டு முதலீடுகள், வெளிநாட்டு கொடுக்கல், வாங்கல்கள், வெளிநாட்டு சந்தை வாய்ப்புகள் என்பன முற்றுமுழுதாக செயலிழந்து காணப்படுகின்றன. வங்கிப் பிரிவுகள் மிகவும் பயங்கரமான அபாய நிலையை அடைந்துள்ளன. நிதித்துறை செயலிழந்துள்ளது.

நாட்டில் முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்திகளை நிறுத்துமாறு கூறுமளவு அரசாங்கத்தின் நிலைமை இன்று மாறியுள்ளது. இவை அனைத்தையும் பார்க்கும்போது நாட்டின் அபிவிருத்தி, நாட்டின் வளர்ச்சி என்பன முற்றாக செயலிழந்து போயுள்ளதே தெரிகின்றது.

விசேடமாக தனியார் துறையைச் சேர்ந்த 26 இலட்சம் பேரின் வாழ்வாதாரம் அபாயாகர நிலைமையை அடைந்துள்ளது.சுற்றுலாத்துறையை போன்று தொழிற்சாலைகளும் இன்று மூடப்பட்டு வருகின்றன" - என்றார்.

(கே)

## இளைஞர் பாராளுமன்றத்தினர் லிதுவேனிய தூதருடன் சந்திப்பு

கொழும்பு, மே 02

இளைஞர் பாராளுமன்றத்தின் வெளிவிவகார பிரதி அமைச்சர் அஹ்மத் சாதிக் மற்றும் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் முப்தி முயீன் இலங்கைக்கான லிதுவேனியாவின் தூதுவர் ஜூலியஸ் பிரணவிசியஸை சந்தித்துப் பேசினர்.

இந்த சந்திப்பில் இலங்கை இளைஞர்களுக்கான உயர் கல்வி, விளையாட்டு, சிறு முயற்சியாண்மை மற்றும் தலை மைத்துவ திறன்கள் விருத்திக் கான வாய்ப்புக்கள் பற்றி கலந்துரையாடப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலின் போது, லிதுவேனியாவின் அர சியல் துறையில் இளைஞர்கள் முக்கிய பங்காற்றுகின்றனர் என்று தூதுவர் குறிப்பிட்டிருந்தார்.

மேலும் அவர் குறிப்பிடுகை யில், லிதுவேனியா மற்றும் இலங்கைக்கான இராஜதந்திர உறவானது 25 வருடங்களாக சிறந்த முறையில் பேணி வருவ தாகவும் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலின் பின்னர், இரு நாடுகளினதும் உறவு இளைஞர்களின் ஊடா கவும் மேலும் வலுப்படுத்த சிறந்த நடவடிக்கைகள் எதிர்காலங்களில் எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

### 2 ஆம் ஆண்டு நினைவு மலர்

தோற்றம்
05 - 10 - 1942



உதிர்வு
25 - 04 - 2020

### நாகலிங்கம் இரத்தினம்

**திதி: துதியை**

அம்மாவின் உணர்வுகள் என்றும்
பாசத்தால் அழியாதவை
நீ எமை காத்த பிள்ளைகள் ஓயாதிருக்கின்றோம்
உன் வழி பின் தொடர
எம் நெஞ்சங்களில் என்றும் நீ
எழில் விடும் பொக்கிஷம்
உன் சிறப்பான எம் வாழ்க்கையை
வித்திட்டு எம் வாழ்க்கைக்கு
இறுதிவரை ஒளி தந்து உயர்வாக்கினாய்
என்றுமே உன் நாமத்தை
பின்பற்றி காத்திருக்கின்றோம்.
அதுவே எமது இறுதி முடிவும்
கடைசி முடிவும் அம்மா
என்றுமே நீ எங்களுடன் பயணித்துக் கொண்டிருக்கிறாய்
என்றும் நீ எங்களுடன்

அன்னாரின் நினைவுதினம் இன்று (02.05.2022) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறும். அதனை தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அனைவரையும் அழைக்கின்றோம். இந்த அறிவித்தலை அனைவரும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

காளிகோயிலடி,
அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை
**077 555 8485**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 02.05.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## கட்சிகளின்...

கட்சிகளின் மே தினக் கூட்டங்கள் கொழும்பு மாவட்டத்தில் நடைபெற்றன.

ஸ்ரீலங்க பொதுஜன பெரமுனவின் மே தினக் கூட்டம் கொழும்பு நுகேகொடையில் பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமானது. இந்தக் கூட்டத்தில் கட்சியின் ஆதரவாளர்கள், உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் என பல்வேறு தரப்பினரும் கலந்துகொண்டனர். அத்துடன், அமைச்சர் டகள்ஸ் தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர்களான காமினி லொகுக்கே ஆகியோரும் பங் கேற்றனர்.

பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் மே தினக் கூட்டம் கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நடைபெற்றது.

அடக்குமுறையாளர்களை விரட்டுவோம்! மக்கள் சக்திக்காக அணிதிரள்வோம் என்ற தொனிப்பொருளில், ஐக்கிய மக்கள் சக்தி ஏற்பாடு செய்திருந்த கண்டி முதல் கொழும்பு வரையிலான ஐக்கிய சக்தி பாதயாத்திரை, நேற்று முன்தினம் பேலியகொடையை வந்தடைந்த நிலையில் நேற்று அங்கிருந்து புறப்பட்ட பேரணி கொழும்பு சுதந்திர சதுக்கத்தை வந்ததடைந்ததுடன் மே தினக்கூட்டமும் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, பாராளுமன்ற உறுப்பினர்களான ரஞ்சித் மத்துமபண்டார, ஹறின் பெர்ணான்டோ எனப் பலர் பங்கேற்றனர்.

இதேவேளை, மக்கள் விடுதலை முன்னணியின் மே தின பேரணி கொழும்பு பஞ்சிகாவத்தை பீ. டி. சிறிசேன விளையாட்டரங்குக்கு முன்பாக ஆரம்பமாகி கொழும்பு கோட்டை ரயில் நிலையம் வரை சென்றது. அதன் பின்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக மேதின கூட்டம் நடைபெற்றது.

இந்தக்கூட்டத்தில் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸநாயக்க, அரசியல் பீட உறுப்பினர் லால்காந்த, மத்தியக் குழு உறுப்பினர் லக்ஷமன் நிபுணராச்சி, சட்டத்தரணி சுனில் வட்டகல உள்ளிட்டோர் பங்கேற்றிருந்தனர்.

ஐக்கிய தேசிய கட்சி பேரணிகள் எதனையும் நடத்தவில்லை. பதிலாக, கொழும்பு புதிய நகர மண்டபப் பகுதியில் கூட்டத்தை மட்டுமே நடைபெற்றது. கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது. இதேசமயம், அனைத்து தொழிற்சங்களும் ஒன்றிணைந்து கொழும்பு ரீகல் சுற்றுவட்டத்திலிருந்து விகாரமாதேவி பூங்காவரை மே தின பேரணியை முன்னெடுத்தன. இவை, கொழும்பு பொது நூலகத்துக்கு முன்பாக மே தினக் கூட்டத்தை நடத்தின.

வழமையாக சர்வதேச தொழிலாளர் தினத்தன்று பிரதான கட்சிகளின் மே தினக் கூட்டங்கள் களை கட்டும். ஆனால், இம்முறை வழக்கமான சனக்கூட்டத்தை இந்தப் பேரணிகளில் காண முடியவில்லை என்று அவதானிகள் தெரிவித்தனர்.

நாட்டின் பொருளாதார, அரசியல் நெருக்கடிகளால் மக்கள் எழுச்சிப் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். மே நாளான நேற்றைய தினமும் போராட்டங்கள் தொடர்ந்தன. இவற்றில் அதிகளவில் மக்கள் பங்கேற்றிருந்தனர். இந்த நிலையிலேயே கட்சிகளின் மே தினக் கூட்டங்களில் மக்கள் பெரியளவில் ஆர்வம் காட்டவில்லை என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. (ஐ - கே)

## நெருக்கடிகளிலிருந்து...

கேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் உரையாற்றிய அவர், “பாரத பிரதமர் நரேந்திர மோடியின் ஆட்சியின் கீழ் முழு உலகமும் இந்தியாவை திருப்பி பார்க்கின்றது. இந்தியா என்பது வல்லரசு நாடாக மாறியுள்ளது. உலகில் 5ஆவது மிகப்பெரிய பொருளாதார பலமுடைய நாடாக மாறியுள்ளது. ரஷ்யா, உக்ரைனுக்கிடையில் மோதல் ஏற்பட்டபோது கூட, உக்ரைனில் வாழ்ந்த இந்தியர்களை சிறு காயமுமின்றி மீட்டெடுத்தார்.

இலங்கையை அருகிலுள்ள நாடு, எமது சொந்தங்கள் வாழும் நாடு என இரு கோணத்தில் இந்தியா பார்க்கின்றது. அதனால்தான் நெருக்கடியான கட்டங்களில் உதவிகள் வழங்கப்படுகின்றன. உயிர் காப்பு மருந்து தேவை என்று சொன்னபோது, 107 வகையான 760 கிலோ மருந்துகளை அனுப்பி வைத்துள்ளோம்.

எதிர்காலத்திலும் உதவுவோம். மலையக மக்களுக்கான உதவிகளும் தொடரும். நாம் வளரும் அதேவேளை, எமது தொப்புள்கொடி உறவுகளையும் வளர வைப்போம். மலையகம் கல்வியால் உயர வேண்டும். அதற்கான உதவிகளும் தொடரும்.

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை, நீண்டகாலத்துக்கானது அல்ல. விரைவில் நிலைமை மாற வேண்டும் என இறைவனை பிரார்த்திக்கின்றேன். இலங்கையை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்டெடுப்பதற்கு இந்தியாவும் போராடிக்கொண்டிருக்கின்றது. அன்று அனுமான் எப்படி சஞ்சீவி மலையை சுமந்தாரோ, அதுபோலவே இலங்கையின் பொருளாதார நெருக்கடியை சுமப்பதற்கு பாரத பிரதமர் நரேந்திர மோடியும் தயாராகவே இருக்கின்றார்.” - என்றார். (ஐ)

## நாளை ரமழான்!...

புனித சவ்வால் மாதத்துக்கான தலைப் பிறை தென்படவில்லை என்று கொழும்பு பெரிய பள்ளிவாசலின் பிறைக்குழு அறிவித்துள்ளது.

இந்நிலையில், புனித சவ்வால் மாதத்துக்கான தலைப்பிறை பார்க்கும் மாநாடு நேற்றிரவு கொழும்பு பெரிய பள்ளிவாசலில் நடைபெற்றது.

இதன்போது நாட்டின் எந்தவொரு பகுதியிலும் பிறை தென்பட்டமைக்கான ஆதாரம் கிடைக்கப்பெறவில்லை. இந்நிலையில், இஸ்லாமியர்கள் இன்று நோன்பை நோற்பதுடன், நாளை புனித ரமழான் பண்டிகையை கொண்டாடவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## தடுப்பூசி...

தடுப்பூசிகளை பெற்றிருக்க வேண்டும் என்றும் அதற்கான அட்டையை வைத்திருக்க வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக வர்த்தமானி அறிவிப்பும் வெளியிடப்பட்டது. இந்த வர்த்தமானி அறிவிப்பே தற்போது மீளப்பெறப்பட்டுள்ளது. (ஐ)

## மகாசங்கத்தின்...

இடைக்கால அரசாங்கம் தொடர்பில் அரசியல் கட்சி தலைவர்களுக்கும் மகாசங்கத்தினருக்கும் இடையே நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை கொழும்பில் உள்ள இலங்கை மன்ற கல்லூரியில் இடம்பெற்ற சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சமூக கட்டமைப்பில் தோற்றம் பெற்றுள்ள அடிப்படை பிரச்னைகளுக்கு இடைக்கால அரசாங்கம் ஊடாக தீர்வு காணுமாறு மகாநாயக்க தேரர்கள் தொடர்ந்து வலியுறுத்துகிறார்கள். இடைக்கால அரசாங்கம் தொடர்பில் அரசியல் கட்சிகளிடம் மாறுப்பட்ட கருத்து வேறுப்பாடு காணப்படுவதால் புதிய அரசாங்கத்தை ஸ்தாபிப்பதில் இழுபறி நிலைமை காணப்படுகிறது.

இடைக்கால அரசாங்கம் தொடர்பில் அரசியல் கட்சிகளுடன் மேற்கொண்ட பேச்சில் பல்வேறு விடயங்கள் குறித்து அவதானம் செலுத்தப்பட்டன. இதற்கமைய முதல்கட்டமாக இடம்பெற்ற பேச்சு சாதகமாக உள்ளது. அடுத்தக் கட்ட பேச்சை முன்னெடுத்து விரைவில் தீர்வு காண எதிர்பார்த்துள்ளோம். - என்றார். (ஐ)

## வடக்கு,...

கில் கிளிநொச்சியிலும், கிழக்கில் மட்டக்களப்பிலும் நடைபெற்றன. இவற்றின் நிறைவில் மே தின பிரகடனம் வெளியிடப்பட்டன. அதிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டன.

அந்தப் பிரகடனத்தில், இலங்கையின் ஆட்புல ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பதாக எண்ணி ஜனநாயகம், சோசலிசம் என்பவற்றின் கதவுகளை அடைத்து பௌத்த சித்தாந்தத்தின் மீதிருந்து ஆட்சி புரிகின்ற ஆட்சியாளர்களின் மனஉலகு, மனிதசமூகம் வெட்கித்தலை குனியும் விளைவுகளையே ஏற்படுத்தி வருகின்றது. பௌத்த கருத்துக்களால் கட்டமைக்கப்பட்ட அரச கருமபீடம் வினைத்திறனுடன் இயங்குவதும், மகாவம்ச மனநிலை காரணமாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற சிங்கள ஏகாதிபத்திய கருத்தியல்களும் இனவேற்றுமை எதுவுமின்றி தொழிலாளர்களின் வாழ்வியலை அடியோடு ஆட்டம்காணச் செய்துள்ளது.

சமகாலத்தில் இலங்கைத்தீவு எதிர்நோக்கியுள்ள டொலர் நெருக்கடி, பணவீக்கம், பொருளாதாரச் சுமைகள், உயர்ந்த வாழ்க்கைச் செலவீனம், சரிந்துசெல்லும் உற்பத்தித்திறன் மற்றும் மூடப்பட்டுள்ள சர்வதேச சந்தைகள் என்பவற்றின் அடிவிளைவுகள், கடந்த 30 வருடகால யுத்தத்தின் விளைவுகளே அன்றி வேறில்லை எனலாம்.

தமிழ்த்தேசிய இனத்தின் நீதியான அபிலாசைகளை ஏற்கமறுத்து, முதிர்ச்சியற்றதும், அரசியல் முகாமைத்துவத் திறனற்றதுமான முடிவுகளால் சர்வதேச வல்லரசுத்தனங்களுக்கு நிகரான யுத்தத்தை எமது மக்கள் எதிர்கொண்டனர். போருக்குப் பின்னர் சர்வ தேச சமூகத்தால் பரிந்துரைக்கப்பட்ட ஜெனிவாத் தீர்மானங்களைப் புறம்தள்ளி யமை, வலிந்து காணாமலாக்கப்பட் டோருக்கு நீதி வழங்கத் தவறியமை, தொடர்ந்தும் தமிழர் தாய்நிலங்களை அபகரிக்க முனைகின்றமை, மக்களின் சுதந்திர செயற்பாடுகளை இராணுவ வல்வளைப்புக்கு உட்படுத்தியமை, தமிழர்களின் பாரம்பரியங்களை தொல்பொருட் சான்றுகள் என்று பிடுங்கி எறிந்தமை, மண்ணின் விடுதலைக்காக வித்துடலாகியவர்களின் நெஞ்சில் ஆக்கிரமிப்பின் கால்களை அகலப்பதித்தமை என்பவற்றின் பரிகார நீதியாகவே இன்றைய ஆட்சி, அதிகாரத்தின் சீர்குலைவு ஏற்பட்டிருக்கிறது - என்றுள்ளது. (ஐ)

## சுதந்திரமாகச்...

ளார்.

தனது விலகலுக்கு 4 பிரதான காரணிகளைக் குறிப்பிட்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அவர் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

சிரேஷ்ட சட்டத்தரணி சிராஸ் நூர்தீன் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகத்தின் உறுப்பினராக கடந்த ஆண்டு டிசெம்பர் 13ஆம் திகதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்டார். இந்நிலையில், சுமார் நான்கு மாத காலத்துக்கு உள்ளாகவே அவர் அந்தப் பதவியிலிருந்து இராஜிநாமா செய்துள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பிலான அலுவலகம் சுதந்திரமாக செயல்படுவதற்கு அரசாங்கம் போதுமான அனுசரணையை அளிக்கவில்லை, ஒருங்கிணைந்த நிதியின் மூலம் போதுமான நிதி ஒதுக்கீடுகளை செய்வதற்கான வாய்ப்புக்கள் இருந்தும் அது செய்யப்படவில்லை, காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பிலான அலுவலகத்தின் மீது நீதி அமைச்சின் தலையீடுகள், ஒப்புக்கொள்ளப்பட்டதன் பிரகாரம் அலுவலகத்துக்கு தேவையான உதவிகளை வழங்க வெளிவிவகார அமைச்சு தவறியமை, காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தின் நடவடிக்கைகளை செயல்திறனாக முன்னெடுப்பதை கட்டுப்படுத்தும் அந்த அலுவலகத்தின் தற்போதைய யாப்பு உள்ளிட்டவற்றை தனது பதவி விலகலுக்கான காரணங்களாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## கிளிநொச்சி...

ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் எங்கே என்றும் குரல் எழுப்பினர்.

மேலும், அரசியல் கைதிகளின் விடுதலை, விவசாயிகளின் பிரச்னைகளை வெளிப்படுத்தம் கருத்தோவியங்களை தாங்கிய வாகன ஊர்தியும் பேரணியில் இணைந்து கொண்டது. அத்துடன், பேரணியில் பங்கேற்றோர் அது தொடர்பாக மக்கள் பதாதைகளையும், கோஷங்களையும் எழுப்பி தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தனர்.

ஆயிரக்கணக்கானோர் பங்கேற்ற இந்தப் பேரணியில் ராஜபக்ஷக்களின் உருவ முகமூடிகளை அணிந்து விவசாயி - தொழிலாளி என்று எழுதப்பட்ட சவப்பெட்டியை ஏந்தியவாறு சென்றதுடன், அதனை டிப்போ சந்தியில் வைத்து எரியூட்டினர். இதன்போது பறை இசையும் இசைக்கப்பட்டது.

தொடர்ந்து மே தின கூட்டம் பசுமை பூங்காவில் இடம்பெற்றது. பறை இசை இசைக்கப்பட்டதைத் தொடர்ந்து சுடர்கள் ஏற்றப்பட்டது. அதனை தொடர்ந்து அரங்க நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான எம். ஏ. சுமந்திரன், எஸ். சிறிதரன், த. சித்தார்த்தன், சார்ள்ஸ் நிர்மலநாதன், செல்வம் அடைக்கலநாதன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, ஈ. சரவணபவன் உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர். (ஐ)

## புகலிடம்...

மேலும், அகதிகளாக சென்றுள்ள 75 இலங்கை தமிழர்களும் மண்டபம் முகாமில் பலத்த கண்காணிப்புக்குள் வைக்கப்பட்டுள்ளனர் என்றும், தமக்கு மூன்று நேரமும் உணவுப் பொதிகளே தரப்படுகின்றன. சமைத்து உண்பதற்குக்கூட அனுமதியில்லை எனவும் அவர்கள் கூறியுள்ளனர்.

நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடிகளால் புகலிடம் கோரி இந்தியாவின் தமிழகத்துக்கு இதுவரை 75 பேர் சென்றுள்ளனர். பொருளாதார நெருக்கடி காரணமாக தமிழகம் சென்றவர்களை ஐ. நா. சாசன விதிகளின்படி அகதிகளாக அங்கீகரிக்க முடியாத நிலையுள்ளது. இதனால், அவர்களை புழல் சிறையில் அடைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஆனால், இதில் விசேட கவனம் செலுத்திய தமிழ்நாடு அரசாங்கம் மனிதாபிமான அடிப்படையில் அவர்களை சிறைக்கு அனுப்பாமல் மண்டபம் அகதி முகாமுக்கு அனுப்பியது. அங்கு அவர்கள் பலத்த கண்காணிப்புக்குள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு தங்க வைக்கப்பட்டிருக்கும் தமக்கு உணவு சமைத்து உண்பதற்குக்கூட அனுமதியில்லை என்று தஞ்சமடைந்துள்ள அகதிகள் பி. பி. சிக்கு தெரிவித்துள்ளனர்.

அத்துடன், அகதிகளாக பதிவு செய்யப்படாமையால் அங்கு தொழில் தேடவோ அல்லது பொருளாதார ரீதியாக ஏதாவது வருமானத்தைப் பெறவோ அவர்களால் முடியாத நிலை காணப்படுவதாகவும் தாம் முகாமுக்குள் சிறையிருக்கும் நிலையிலேயே உள்ளனர் என்றும் குறிப்பிட்டனர்.

இதேசமயம், இலங்கையிலிருந்து தமிழகம் சென்றுள்ள அகதிகளின் நலனில் அக்கறை செலுத்திவரும் தொண்டு நிறுவனமான ‘ஒப்பர்’ நிறுவன அதிகாரி ஒருவர் கூறுகையில்,

“நாட்டில் உயிர் வாழ முடியாது என்று புகலிடம் கோருவோரை மட்டுமே அகதிகளாக பதிவு செய்ய முடியும். ஆனால், இலங்கையிலிருந்து வருபவர்கள் பொருளாதார நெருக்கடியால் வருகிறார்கள். இவர்களை அகதிகளாக பதிவு செய்ய முடியாது. புகலிடம் கேட்டு தமிழகம் வந்தவர்களை ஒரு மாதத்துக்கு மேல் அகதிகளாக பதிவு செய்யாமல் வைத்திருப்பது இதுவே முதன்முறை. இதே நிலை தொடர்ந்தால் அவர்களை திருப்பி அனுப்பும் நிலையே உள்ளது”, என்று கூறியிருக்கிறார். (ஐ)

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்
7.05 மணி : உளவியல் கருத்து-
உளவளத்துனையாளர் நா.நவராஜ்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : பண்டிதர் திருநாவுக்கரசு
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர்
டாக்டர் விவியன் சத்தியசீலன்



7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : கொழும்பு-16-மறு ஒளிபரப்பு
11.30 மணி : மனிதனின் மறுபக்கம்

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
நகைச்சுவை நிகழ்ச்சி
1.00 மணி : அறிந்தும் அறியாமலும்
(மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்- சிறுவர்களை
மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : ரெயிலர் ரைம்
6.30 மணி : நலந்தானா

**இரவு**
7.00 மணி : சொற்சமர் -பாடசாலை
மாணவர்களுக்கா விவாத நிகழ்ச்சி
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சாட்சியம்
9.30 மணி: ஹலோ கோடம்பாக்கம்
10.00 மணி : நேருக்கு நேர்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

---

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

---

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

---

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள்
(மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை
(சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை
(திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம்
(மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

---

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு

இலங்கை தினசரி மற்றும் வாரந்த பத்திரிகைகளை உங்கள் மொபைலில் பெற்றுக்கொள்ள எம்மோடு இணையுங்கள்

Viber இல் இணைய இங்கே CLICK செய்யுங்கள்

Viber




இக் குழுமத்தில் இணைவதனால் மற்றவர்கள் உங்கள் தொலைபேசி இலக்கத்தை பார்வையிட முடியாது

CLICK

